
இன்பத்தை அள்ளித்தரும்
இந்துமதம்
7
தமிழறிஞர்
கே. வி. குணசேகரம்

# இன்பத்தை அள்ளித்தரும் இந்துமதம்

பாகம் - 7

தமிழறிஞர்
கே. வி. குணசேகரம்.

# என்னுரை

இந்து தத்துவங்கள் பலவற்றைப் படித்தேன். பல புதுமைகள் அவற்றுள்ப் புதைந்து கிடப்பதை அறிந்து அவற்றை உங்களுடன் பகிர்ந்து கொள்கிறேன். யான் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்.

இந்நூலின் எழுத்துப் பிழைகளை நீக்கித் தந்த ஆசிரியை செல்வி பரநிரூபசிங்கம் இறைமகள் அவர்களுக்கும், ஓய்வு பெற்ற அதிபர் திரு. வா. ஜெயரத்தினம் அவர்களுக்கும், கணனி மயப்படுத்தித் தந்த செல்வி க. தேனமிர்தம் அவர்களுக்கும், இந்நூலை வெளியிடும் லங்கா பதிப்பகத்தினருக்கும் நன்றி.

கோப்பாய் மத்தி,
கோப்பாய்.

கே. வி. குணசேகரம்
கோட்டக்கல்விப் பணிப்பாளர்,
நல்லூர்.

## நம்பிக்கை; துணிவு; முயற்சி.

இன்பத்தை அள்ளி வழங்குவதையே இந்து மதம் நோக்கமாகக் கொண்டது என்று நான் எழுதிய ஆறு பாகங்களையும் படித்து உணர்ந்திருப்பீர்கள். இவை எதுவும் நான் சொன்னவை அல்ல. இந்து மதநூல்கள் சொன்னதை உங்களுக்கு விளங்கும்படி சொல்லியுள்ளேன்.

சங்ககாலத்தில் சொல்லப்பட்டவை செய்யுள் வடிவில் இருந்தமையால் கற்றவர்களே அதை அறிந்து கொண்டனர். சுமார் நூறு ஆண்டுகளுக்கு முன் வாழ்ந்த ஆறுமுகநாவலர் அவர்கள் இச்செய்யுள்களை வசனரூபமாக்கினார். சுத்தமான இலக்கணத்தமிழை அவர் எழுதினார். அதை அன்று வாழ்ந்த மக்கள் புரிந்து கொண்டனர். இன்று வாழ்வோருக்கு அது சங்கத்தமிழ்ச் செய்யுள்கள் போலவே இருக்கின்றன. இன்று மொழியின் போக்கில் பாரிய மாறுதல் ஏற்பட்டுள்ளது. மனிதர்களுக்கேற்ப மொழி ஆரம்பகாலம் முதல் தன்னுள் ஏற்பட்ட மாற்றத்தை ஏற்றுள்ளது. காலத்தின் தேவையறிந்து அதற்கேற்ப எழுதுபவன் தான் கலைஞன்.

எனது இனத்தின் கலை, கலாச்சாரம், பண்பாடு என்பவற்றை அறிந்து கொள்வதற்காக நான் வேதங்களையும், உபநிடதங்களையும், திருக்குறள், திருமந்திரம், பகவத்கீதை, இராமாயணம், திருப்புகழ் போன்ற நூல்களையும் படித்தேன்.

ஒரு பட்டதாரியான நான் முன்பு தேர்வுக்காகப் படித்து அறிந்ததை விட ஆயிரம் மடங்கு விஷயங்களை நான் மேற்கூறிய நூல்களைக் கற்றதன் மூலம் அறிந்துகொண்டேன்.

திருக்குறள், பகவத்கீதை, ஆத்திசூடி போன்ற இந்து தத்துவ நூல்களின் உரையை நான் பலமுறை படித்தும் அதன் பொருளை என்னால் புரிந்து கொள்ள முடியவில்லை.

‘புத்திமான் பலவான்’ என்று பஞ்ச தந்திரம் கூறுகிறது. இதை நூறு வரிகளைக் கொண்ட கட்டுரையை எழுதியோ, அல்லது அரைமணித்தியாலம் விளக்கம் கொடுத்தோ ஒரு மாணவனுக்குப் புரியவைக்க முடியாதென்பதை நான் ஆசிரியராகக் கடமையாற்றும் காலத்தில் உணர்ந்து கொண்டேன்.

‘புத்திமான் பலவான்’ என்ற கருத்தை விளங்கப்படுத்தச் சிங்கமும் முயலும் என்ற கதையைச் சொன்னேன். மாணவர்கள் அனைவரும் மிகுந்த ஆர்வத்துடன் கேட்டுத்தெரிந்து கொண்டனர். பல நாட்களுக்குப் பின் ‘புத்திமான் பலவான்’ என்ற தலைப்பைக் கொடுத்துக் கட்டுரை எழுதச் சொன்னேன். மாணவர்கள் அனைவரும் விளக்கமான கட்டுரையை எழுதினர்.

அதன் பயனாக ஆத்திசூடிச் சூத்திரங்களுக்கும், திருக்குறள் பாக்களுக்கும், பகவத்கீதைச் சுலோகங்களுக்கும் கதைகள் எழுதினேன். பத்து வயதுப் பாலகன் கூட அதைப் புரிந்து கொண்டான். அதனால் இதுவரை தத்துவமாகச் சொன்ன இந்துமத விளக்கங்களை இந்நூலில் கதைகளாகச் சொல்ல விரும்புகிறேன்.

நூல்களைப் படிக்கப் படிக்க அவற்றின் தத்துவங்கள் ஆழமாகப் புரிய ஆரம்பித்தன. அவற்றை மக்களும் தெரிந்து கொள்ளவேண்டும் என்ற ஆவல் மனதில் கிளர்ந்தெழுந்தது.

மக்கள் இந்து தத்துவங்களைப் புரிந்து கொள்ளாமையால் தான் அவற்றை மூடக்கொள்கைகளாக

நினைக்கிறார்கள். வாழ்க்கைத் தத்துவங்களைக் கேள்விக் குரியவைகளாக நினைக்கிறார்கள் என்று புரிந்து கொண்டேன். மனிதனுக்கு இன்பத்தை அள்ளிக்கொடுக்கின்ற இந்து தத்துவங்களைக் கதையாகக் கூறினால் அதிக பயன் கிடைக்கும் என்று நம்பினேன். அதனால் சில தத்துவங்களை இந்நூலில் கதைகளாகக் கூறுகிறேன்.

இன்பம் பெறவேண்டுமானால் எதையெதைக் கைக்கொள்ள வேண்டுமென்று இந்து சமயங்கள் விளக்கமாகக் கூறுகின்றன.

“உன்னில் நம்பிக்கை வை; சமய அனுட்டானங்களில் நம்பிக்கை வை; அவற்றை நம்பிக்கையுடன் பின்பற்று”

“முயற்சி செய்; ஒரு போதும் முயற்சி செய்யும் போது மனம் தளராதே; தோல்வி ஏற்பட்டாலும் முயற்சியைக் கைவிடாதே; நீ செய்யவிருக்கும் செயலினைப் பற்றி அதை அறிந்த அனுபவஸ்தரிடம் ஆலோசனை கேள்; செயலாற்றும் போது சிற்றினம் சேராதே; செயலாற்றும் போது பொருத்தமான கருவிகளுடன் செயற்படு”

“உனக்கென ஒதுக்கப்பட்ட கடமைகளைத் தவறாது செய்; நன்கு ஆராய்ந்து திட்டமிட்ட பின்பே உனது கடமைகளைச் செய்யத் தொடங்கு; ஆராய்ந்து செய்யத்தொடங்கிய செயலை இடையில் கைவிடாதே; கடமைகளைச் செய்யும் போது கடமையின் வலிமையையும், அதனால் உண்டாகும் நன்மை தீமைகளையும் அறிந்த பின்பே செயலைத் தொடங்கு; காலம் அறிந்து கடமைசெய்; உனது கடமைகளைச் செய்யும் போது பயப்படாதே; தயங்காதே; உனது எதிரிகளை எளியவர்களாக எண்ணிக் கர்வப்படாதே”

“அறிஞர்களிடமும் சில அறியாமைகள் இருக்கும். அதனால் நீ செயலுக்காகச் சேர்க்கவிருக்கும் மனிதர்களின் குணங்களை நன்கு ஆராய்ந்து பார், பின்னர் அவர்கள் செய்த குற்றங்களை ஆராய்ந்து பார், அவற்றுள் எது மிகுதியாக இருக்கிறதோ, அதைக்கொண்டு அவன் இப்படியான குணங்களை உடையவன் என்று தீர்மானித்துக்கொள்” என்று வள்ளுவர் கூறுகிறார்.

“உனக்கு மிகுந்த மகிழ்ச்சியேற்படும் போது மறதி கட்டாயம் உண்டாகும். மறதியில்லாது வாழப்பழகு; அளவுக்கதிகமாக உன்னைப் புகழாதே; தன்னடக்கத்துடன் எந்நாளும் வாழ்”.

“மற்றவர்களுக்கு உதவி செய்யாது, நீ செய்யவிரும்புவதைத் தொண்டாகச் செய். மலையளவு உதவியைச் செய்தாலும் தினையளவு நன்றியைக்கூட எதிர்பாராதே. சேவை செய்யும் போது அன்புள்ளவனாக இரு; இரக்கம் கொண்டவனாக இரு; நீ செய்யும் தொண்டுகள் முடிவடைந்ததும் அவற்றை மறந்துவிடு; சோம்பல் கொள்ளாதே; சோர்வு அடையாதே”

“ஒழுக்கமான வாழ்வு தான் சமயவாழ்வு என்பதைப் புரிந்து நட; ஒழுக்கமில்லாது செய்யப்படும் தானம், தவம் எவையும் நல்ல பயனைத் தராது; ஒழுக்கத்தை உயிராக நினை; ஒழுக்கமில்லாது வாழ்பவன் எதைச் செய்தாலும் பயனடைய மாட்டான் என்று புரிந்து கொள்”.

“விதியை நம்பு; விதிப்படி தான் யாவும் நடைபெறும் என்பதால் யாருக்கும் மனதால்கூட தீங்கு வரவேண்டும் என்று

எண்ணாதே; எதிரிகள் துன்பப்பட்டால் நீ உதவாவிட்டாலும் இரக்கப்படு. விதியின் வலிமையை உனது செயல்களால் மாற்ற முடியும் என்று நம்பு''

''தானம் செய்; உனக்குத் தேவையானவற்றை எடுத்துக் கொண்டு மிகுதியாக இருப்பவற்றையெல்லாம் தானம் செய்; முயற்சியும், கடவுளின் கிருபையும் உனக்கு வேண்டியவற்றைத் தரும் என்று நம்பு. ஏழையின் வடிவில் தான் இறைவன் இருக்கிறார் என்று இந்துதர்ம நூல்கள் கூறுகின்றன. அவற்றை நம்பிச் செயற்படு.''

''உனது மனைவியை நேசி. அவள் மூலந்தான் உலக இன்பங்கள் யாவும் உன்னை வந்தடைகின்றன என்று நம்பு. அவள் மீது நீ செலுத்தும் அன்பு இறைவனைச் சென்றடையும் என்பதை அறிந்தவன் நீ. அதனால் மனைவியின் மீது அன்புகொள். நீ நல்லபடி மனைவியுடன் கூடிவாழ்ந்தால் நல்ல மக்களைப் பெறுவாய். அவர்கள் மூலம் உனக்குச் சகல ஐஸ்வரியங்களும், புகழும் கிடைக்கும் என்று நம்பு''.

இவ்வாறு வாழ்ந்தால் நீ இம்மையிலும், மறுமையிலும் இன்பமாக வாழலாம் என்று இந்துதர்மம் கூறுகிறது. இவற்றையே வேதங்களும், உபநிடதங்களும், தர்ம சாஸ்த்திரங்களும், புராண இதிகாசங்களும், இந்துமத நூல்களும் கூறுகின்றன. செய்ய முடியாத எவற்றையும் இந்து சமயங்கள் கூறவில்லை. இலகுவாகச் செய்யக்கூடியவற்றையே அவை கூறுகின்றன. இலங்கையிலும் இந்தியாவிலும் வாழ்ந்த புகழ் மிக்க பெரியவர்களின் வாழ்க்கை வரலாற்றை எடுத்துப் பார்த்தால், அவர்களெல்லோரும் இந்து மதம் கூறியவற்றைக் கடைப்பிடித்தவர்களாகவே காணப்படுகிறார்கள். ஆத்மாவை

வென்ற ஞானியாயினும் சரி, அரசியலில் துறைபோன மனிதனாயினும் சரி அவன் மேலோன் எனப்பலராலும் புகழப்படுவதை ஆராய்ந்து பார்த்தால் அவன் தனது மதக்கடமைகளை நல்லபடி அனுஷ்டித்தவனாக இருப்பதைக் காணலாம். மதநம்பிக்கை, மத அனுஷ்டானம் என்பன ஒரு மனிதனுள் இருக்கும் தெய்வீகத் தன்மையை வளர்த்து உலகத்தவர்களை நேசிக்க வைக்கும்; "உலகத்தவர்களை நேசிப்பவன் கடவுளை நேசிப்பவன். இறுதியில் அவன் கடவுளாகி விடுவான்" என்று உபநிடதங்கள் கூறுகின்றன.

நம்பிக்கை இல்லாதவன் பலவீனன். அவனால் எதையும் செய்ய முடியாது. நம்பிக்கையுள்ளவன் எவரிடமிருந்தும் எதையும் எதிர்பார்க்க மாட்டான். அவனுடைய வாழ்க்கையை எடுத்துப் பார்த்தால் அவன் யாரிடமும் எந்த உதவியையும் பெறாமல் வெற்றியடைந்திருப்பதைக் காணலாம். அவன் தன்னுடைய முயற்சியால் முன்னேறிய வழிகளை நீயும் பின்பற்று. ஏனென்றால் உனக்கு உதவி செய்ய உன்னைத்தவிர வேறுயாரும் வரமாட்டார்கள்.

முயற்சியின் மூலம் நீ இமயம் அளவிற்கு உயர்ந்தால் உன் மீது நம்பிக்கை வைக்க உலகமே தயாராகும்.

கடலூர் அரசன் மணிவர்மன் மிகுந்த பலசாலி. மக்களை அன்புடன் நேசிப்பவன். ஆனால் தான் நினைத்தது தான் சரி என்று எண்ணுவான். அவன் தன்னை மிஞ்சிய எவரும் நாட்டில் இல்லையென்று இறுமாப்புடன் வாழ்ந்து வந்தான்.

அந்நாட்டில் ஒரு ஞானி இருந்தார். கடுந்தவம் செய்து அவர் பல சித்திகளைப் பெற்றிருந்தார். அதனால் எந்நாளும்

அவரது ஆச்சிரமத்தில் சனங்கள் கூட்டம் கூட்டமாக நிற்பார்கள். அயல் நாடுகளிலிருந்தும் வருவார்கள்.

மக்கள், தன்னை விட அந்த ஞானியை மிகவும் விரும்புவது மணிவர்மனுக்குப் பொறாமையாக இருந்தது. அதனால் அந்த ஞானியைச் சந்திக்க விரும்பினான். ஆனால் அரசனது அழைப்பை ஏற்று ஞானி அரண்மனைக்கு வரவில்லை.

ஒரு நாள் வீதியுலாச் செல்வது போல மன்னன் அந்த ஞானி வாழ்ந்த ஆச்சிரமத்தின் ஊடாகச் செல்லும் பாதையில் பட்டத்து யானையில் சென்றான்.

மக்கள் வீதிகளைக் கூட்டித் துப்பரவு செய்து, அலங்கரித்து, தத்தமது வீட்டு வாசல்களில் பூரண கும்பங்களை வைத்து அரசனை வரவேற்றனர்.

மன்னன் ஞானியின் ஆச்சிரமப் பக்கம் வந்தான். ஆச்சிரமத்திற்கு முன்பாகவுள்ள அரசமர நிழலில் ஞானி நிஷ்டையில் இருந்தார். அவர் நிஷ்டையில் இருக்கும் போது அவரின் அருகில் பெருந் தீ மூண்டாலும் அவருக்குத் தெரியாது. அவர் அப்படி இருக்கும் வேளைகளில் கதைப்பார்; சிரிப்பார். அப்பொழுது மக்கள் அவர் சிவபெருமானுடன் கதைத்துக் கொண்டிருக்கிறார் என்று தமக்குள் பேசிக் கொள்வார்கள்.

அரசன் வந்த நேரம் ஞானி பலமாகச் சிரித்தார்; கைகொட்டிக் கொட்டிப் பலமாகச் சிரித்தார். அரசன் யானை மீதிருந்து அவரைப் பார்த்தான். அவர் தன்னைக் கேலி செய்வதாக நினைத்துத் தனது உடைவாளை உருவி ஞானியின் தலையைத் துண்டிக்கச் சென்றான்.

ஞானியைப்பற்றியும், அரசனைப் பற்றியும் நன்கறிந்த முதலமைச்சர் சொன்னார்; “அரசே, ஞானிகள் நிஷ்டையில்

இருக்கும் வேளைகளில் சிவபெருமானுடன் உரையாடிக் கொண்டிருப்பார்கள். அவர்களது ஆத்மா உடலைவிட்டுப் பிரிந்து சென்றிருக்கும். ஆதலால் நிஷ்டையால் எழுந்த பின்பு ஞானியின் தலையைத் துண்டியுங்கள்'' என்றார். முதலமைச்சரின் பேச்சைக் கேட்ட மன்னன் வாளை உறையில் இட்டுவிட்டு ஆச்சிரமத்தில் இருந்த ஓர் ஆசனத்தில் அமர்ந்தான்.

சிறிது நேரத்தில் நிஷ்டை கலைந்து எழுந்த ஞானி, தன் முன் பட்டத்து யானையும், படைவீரர்களும் நிற்பதைக் கண்டார். ஞானி எழுந்ததும் பட்டத்து யானை மரநிழலில் இருந்த சிவலிங்கத்திற்கு அணியப்பெற்றிருந்த பூமாலையைத் தனது தும்பிக்கையால் கழற்றிக் கொண்டுவந்து ஞானியின் கழுத்தில் போட்டது.

மக்கள் ''அரோகரா அரோகரா..''எனக்கோசம் எழுப்பினர்.

மன்னனைக் கண்ட ஞானி; ''அரசே உனக்கு மங்களம் உண்டாகட்டும்'' என்றார்.

''முனிவரே நீர் எல்லாம் வல்லவரோ?'' என்று கேட்டான் மன்னன்.

ஞானி சிரித்தார். மன்னன் சொன்னான்; ''நீர் எல்லாம் வல்லவர் என்று மக்கள் பேசிக்கொள்கிறார்கள். அதனால் எனது பட்டத்து யானையை வெள்ளை நிறமாக்கிவிடும்''

முனிவர் சிரித்தார். பின்பு சொன்னார்; ''மன்னா, உனது பட்டத்து யானையைப் பார் அது வெள்ளை நிறமாக மாறிவிட்டது''

அரசன் யானையைப் பார்த்தான். அது கறுப்பாகவே இருந்தது. ஆனால் மக்கள் அனைவரும் ஒன்று சேர்ந்து;

“பட்டத்து யானை ஞானியின் அருளால் வெள்ளை நிறமாகிவிட்டது” என்று கோசமிட்டனர்.

அரசன் மீண்டும் பார்த்தான். யானை கறுப்பு நிறமாகவே இருந்தது. அரசனின் தடுமாற்றத்தைப் புரிந்துகொண்ட முதலமைச்சர் சொன்னார்; “அரசே, நீங்கள் அதிஸ்டசாலி. உலகெங்கும் ஆயிரக்கணக்கான அரசர்கள் இருக்கிறார்கள். அவர்களது பட்டத்து யானை கறுப்பு நிறமுடையது. ஆனால் தங்களது பட்டத்து யானை இந்திரனது பட்டத்து யானையைப் போலப் பால் போன்ற வெண்மையாக உள்ளது”.

அரசன் மீண்டும் பார்த்தான். பட்டத்து யானை கறுப்பு நிறமாகவே தெரிந்தது.

“அரசே, நான் பாக்கியவான். வெள்ளை யானையைப் பராமரிக்க நான் கொடுத்து வைத்திருக்க வேண்டும்” என்றான் யானைப் பாகன்.

அரசனுக்குச் சந்தேகம் ஏற்பட்டது. அருகில் இருந்த சிறுவன் ஒருவனை அழைத்து; “அரசனின் யானை என்ன நிறம்?” என்று கேட்டான்.

“மகனே, பெரியவர்களும், பெற்றோரும், பொய் சொல்லமாட்டார்கள். அவர்கள் கூறும் வார்த்தைகளை நீ மந்திரங்களாக ஏற்றுக் கொள்ளல் வேண்டும்” என்று தாயார் கூறியது அவனது நினைவுக்கு வந்தது.

“அரசே, உங்கள் பட்டத்து யானை வெள்ளை நிறமாக மாறிவிட்டது” என்றான் அச்சிறுவன்.

மன்னன் யானையைப் பார்த்தான். அது கறுப்பு நிறமாகவே இருந்தது. எனினும் அதை அவனால் வெளியே சொல்ல முடியவில்லை.

“நீ எதை நினைக்கிறாயோ அதுவாகவே ஆகிறாய்” என்று தனது பிரம்மச்சாரியப் பருவத்தில் அரசகுரு சொன்னது அரசனது காதில் ஒலித்தது. அப்பொழுது பட்டத்துயானை அரசனுக்கு வெள்ளை நிறமாகத் தெரிந்தது.

ஞானி சிரித்தார். எல்லோரும் தான் சொன்ன வார்த்தைகளில் நம்பிக்கை வைத்ததால் தான் கறுப்பு யானை வெள்ளை நிறமாகத் தெரிந்தது. எல்லோரும் சொல்வதை நம்பியதால் அரசனுக்குக் கறுப்பு யானை வெள்ளையாகத் தெரிந்தது.

இது போன்றது தான் கடவுள் நம்பிக்கை; “கடவுள் இருக்கிறார், அவர் எந்நாளும் எனக்கு உதவி செய்வார்” என்று நம்புபவன் வாழ்க்கையில் எப்பொழுதும் வெற்றி பெறுவான். நம்பிக்கை தான் வாழ்வு; நம்பிக்கையின்மை அழிவு. நம்பிக்கை தான் மகிழ்ச்சியான வாழ்வை அளிக்கும். பலவீனம் துன்பங்களையும், துயரங்களையும், தோல்விகளையும் தரும்.

எனது நண்பர் ஒருவர் இருந்தார். அவர் நான் சொல்லும் அத்தனையையும் நம்பிவிடுவார். அவ்வளவு நம்பிக்கையை அவர் என்மீது வைத்திருந்தார்.

என் மீது அவர் கொண்ட நம்பிக்கையை நான் எனது இன்னொரு நண்பருக்குத் தெரியபப்படுத்த விரும்பினேன்.

ஒருநாள் என்மீது நம்பிக்கை கொண்ட நண்பருக்கு வயிற்றுப்போக்கு ஏற்பட்டது. அது மருந்தால் குணப்படவில்லை. நான் ஒரு போத்தலில் தேனை எடுத்துக்கொண்டு எனது மற்ற

நண்பரது வீட்டுக்குச் சென்றேன். அவர் வீட்டில் இருந்தார். ‘‘கையை நீட்டுங்கள்’’ என்றேன். அவர் மறு பேச்சின்றிக் கையை நீட்டினார்.

அவரின் கையில் சிறிது தேனை ஊற்றிவிட்டு சொன்னேன். ‘‘கையில் உள்ளதை நக்குங்கள்’’

அவர் நக்கிச் சுவைத்து விட்டு சொன்னார். ‘‘மிகவும் நல்ல சுத்தமான தேன்’’

‘‘சரி வாருங்கள்’’ என்று அவரையும் அழைத்துக் கொண்டு என்மீது அளவுக்கதிகமான நம்பிக்கை வைத்திருக் கும் நண்பரின் வீட்டுக்குச் சென்றேன். அவர் வேர் அறுந்த கொடியைப் போல வாடி வதங்கிப் படுத்திருந்தார்.

‘‘நண்பா, மிகவும் அரிய மருந்து ஒன்று கொண்டு வந்திருக்கிறேன். வயிற்றோட்டமுள்ளவர்கள் குடித்தால் உடனே சுகமாகும். ஆனால் படுகச்சல். வேப்பங்காயை விடக் கசப்பானது. குடிப்பாயா?’’ என்று கேட்டேன்.

‘‘தா குடிக்கிறேன்’’ என்று போத்தலை வாங்கினார். நாக்கை வெளியே நீட்டியபடி தனது மூக்கை இடது கையால் பிடித்துக்கொண்டு அடித்தொண்டைக்குள் விட்டு விழுங்கிவிட்டு ‘‘படு கச்சல்….’’ என்றவாறு பக்கத்தில் இருந்த தேன் போத்தலை எடுத்துத் தேனைக் கையில் ஊற்றி நக்கிச் சுவைத்துவிட்டுச் சொன்னார்; ‘‘தேன் குடித்த பின்னும் நாவிலிருந்து கசப்பு நீங்கவில்லை’’இ நான் அழைத்து வந்த எனது நண்பனைப் பார்த்தேன். அவர் சிலையாக நின்றார். பின்பு திருக்குறள் ஒன்று சொன்னார்.

802. நட்பிற்கு உறுப்புக் கெழுதகைமை மற்று அதற்கு
உப்புஆதல் சான்றோர் கடன்.

நட்புக்கு உறுப்பாவது நண்பர்கள் உரிமையோடு செய்கின்ற செயல், அந்த உரிமையான செயலுக்கு உடன்படுவது சான்றோரது கடமையாகும்.

மிகுந்த கடவுள் பக்தி உடையவர்களும் சில விடயங்களில் கடவுளின் கிருபையை உடனே நாடுவதில்லை. "இச் சிறிய விடயத்தையும் கடவுளிடம் கேட்க வேண்டுமா?" என்று நினைப்பார்கள்.

அப்படி ஒரு சம்பவம் அண்மையில் எனக்கு நடைபெற்றது.

மலவாசலுக்கு அருகே சிறிதான ஒரு தடிப்பிருந்தது. அது பெரிய புண்ணைப் போலக் கடுமையாக வலித்தது.

வீட்டார், "சூடாக இருக்கலாம் என்றார்கள்". தேகத்தின் சூடு அதிகரித்தால் இப்படியான நோய்கள் எனக்கு வருவதுண்டு. அப்படியான வேளைகளில் தொட்டி நிறையக் குளிர்ந்த நீரை நிரப்பிப் பத்து நிமிடங்கள் அதற்குள் இருப்பேன். இப்படி மூன்று முறை இருந்தால் உடலில் உள்ள சூடு குறைந்துவிடும்.

ஐந்து தினங்கள் இருந்தும் நோக் குறையவில்லை. அதனால் குளிர்மையான உணவுவகைகளைச் சாப்பிட்டேன். வலி அதிகரித்தது. அதனால் யாழ்ப்பாணம் அரசினர் வைத்தியசாலையில் உள்ள மிகப் பெரிய வைத்திய நிபுணரைச் சந்தித்து எனது நோயைப் பற்றிச் சொன்னேன். அவர் பரிசோதித்து விட்டுச் சொன்னார்; "நீர் சொல்வதைப் போல எந்தத் தடிப்பும் இல்லை. மருந்து தருகிறேன் சாப்பிட்டு விட்டு ஒரு வாரம் கழிய வாரும்" என்றார்.

ஒரு வாரம் கழிந்தது. மருந்து முடிந்து விட்டது, ஆனால் நோய் அதிகரித்தது.

மீண்டும் வைத்திய நிபுணரிடம் சென்றேன். அவர் பரிசோதனை செய்துவிட்டுச் சிரித்தார் பின்பு; ‘‘எனக்கு நீர் கூறுவதைப் போலத் தடிப்பு எதுவும் தெரியவில்லை. இரத்தப் பரிசோதனை செய்யும். இம் முறை மருந்து தேவையில்லை’’ என்றார்.

என்னால் அவரது கதையை நம்ப முடியவில்லை. கொதிவலி வதைத்துக் கொண்டிருந்தது. யாழ்ப்பாணத்தைப் பொறுத்தவரை அவர் தான் பேரும் புகழும் மிக்க வைத்தியர். அவரைவிட்டால் கொழும்புக்கு அல்லது இந்தியாவுக்குத்தான் செல்ல வேண்டும். அதை நினைக்கக் கலக்கமாக இருந்தது.

மூன்று தினங்களுக்குப் பின்பு இரத்தப் பரிசோதனைச் சிட்டையுடன் அவரிடம் சென்றேன். அவர் சிரித்தார் அது கேலிச்சிரிப்புப் போல இருந்தது.

மீண்டும் என்னைப் பரிசோதனை செய்துவிட்டு சொன்னார். ‘‘உமக்கு எந்த நோயும் இல்லை, நீர் கூறுவது போலத் தடிப்பு எதுவும் இல்லை, இருப்பினும் மருந்து தருகிறேன். இனி வரத் தேவையில்லை’’ என்றார்.

எனக்கு தலை சுற்றியது; பயம் அதிகரித்தது. எனது சிறிய தந்தையாருக்குக் கையில் ஒரு சிறிய வீக்கம் இருந்தது. அதற்கு அவர் செய்யாத வைத்தியமே இல்லை. ஆரம்பத்தில் சிறு வீக்கமாக இருந்த அப் பகுதி நாளடைவில் பெருத்தது. அதனால் அவர் இறந்து விட்டார்.

உடல் வியர்க்க வெளியே வந்தேன். அந்த மருத்துவமனையில் வேலை செய்யும் ஒருவர் எனக்கு

தெரிந்தவர் அவருடன் எனது நோயைப்பற்றி முதல் நாள் கலந்துரையாடியிருந்தேன்

"இவரை விடச் சிறந்த வைத்தியர் யாழ்ப்பாணத்தில் இல்லை. அவரிடம் சிகிச்சை பெற மக்கள் மாதக்கணக்கில் காத்திருக்கிறார்கள். அவர் சொன்னால் அரக்காது. நீர் வீணாகப் பயப்படுகிறீர். மனத்தில் எழும் தேவையில்லாத எண்ணங்கள் தான் நோயைப் பெரிதாக்குவது. உமக்கு எந்த வருத்தமும் இல்லை. மனத்தைத் தைரியமாக வைத்திருங்கள்" என்றார்.

உடலெல்லாம் பயங்கரமாக வலித்தது. ஆசனத்தில் அமர்ந்திருக்க முடியவில்லை; எழுந்து நடக்கவும் முடியவில்லை. அதனால் கொழும்புக்குப் போவோமா என்று எண்ணியபடி வீட்டுக்கு வந்தேன்.

வீட்டிற்கு அருகே வெள்ளெருவைப் பிள்ளையார் கோயில் இருந்தது. வெள்ளெருவைப் பிள்ளையார் தான் எனது குல தெய்வம்.

வெள்ளெருவைப் பிள்ளையாரை நான் அதிபராக இருந்த நாவலர் தமிழ் வித்தியாலயத்திலும் பிரதிஷ்டை செய்திருந்தேன்.

அன்று வெள்ளெருவைப் பிள்ளையாரை மனமுருகி வணங்கினேன்; "பிள்ளையாரே, எனக்கு நீ கொம்பை முறித்துத் திருக்குறள்க் கதைகளும், பகவத்கீதைக் கதைகளும் எழுதித்தந்தாய். இப்பொழுது நோயால் அவதிப்படுகிறேன். என்னால் இருக்கவும் முடியவில்லை, நடக்கவும் முடியவில்லை இனி மருந்தோ வைத்தியரோ எனக்குத் தேவையில்லை. உனது அருள் மட்டும் போதும்" என்று கூறிவிட்டு வீட்டுக்கு வந்தேன்.

எனது நண்பர் ஒருவர் தமிழ் நாட்டுக்கு சென்றிருந்தார். அவர் சத்திய சாய் பாபாவையும் சென்ற தரிசித்திருந்தார்.

அவர் எனக்கு சத்தியசாய் பாபாவின் திருநீறு கொண்டு வந்து தந்துவிட்டு; ‘‘இது மருந்து’’ என்றார்.

மருந்து என்றதும் எனக்கு எனது நோய்தான் நினைவுக்கு வந்தது. நான் சத்தியசாய் பாபாவின் பெரும் பக்தன் இல்லாவிட்டாலும் கடந்த பல வருடங்களாக அவரை வணங்கி வருகிறேன்.

வெள்ளெருவை விநாயகரை வணங்கியபடி திருநீற்றை மூன்று தினங்கள் காலையும் மாலையும் வலியுள்ள இடத்தில் பூசினேன். வலி இருந்த இடம் தெரியாமல் மறைந்து விட்டது.

நாயன்மார்கள், முனிவர்கள், தவசிகள், ஞானிகள், எல்லோரும் திருநீற்றில் நம்பிக்கை வைத்து, அதைப்பூசி அரிய பல செயல்களைச் செய்தனர். ஞானிகள் திருநீற்றைக் கொடுத்து மக்களின் பிணியை இப்போதும் தீர்த்து வருகின்றனர். கடவுளிலும், திருநீற்றிலும் வைத்த நம்பிக்கை எனது நோயைத் தீர்த்தது. அதனால் இனி எந்த நோய் வந்தாலும் முதலில் கடவுளை வேண்டி திருநீறு அணிய வேண்டும் என்று முடிவு செய்துள்ளேன்.

எதிலும் வெற்றி பெற வேண்டுமானால் இறைவனிடத்தில் நிறைந்த நம்பிக்கை வைத்தல் வேண்டும். திருநாவுக்கரசு நாயனார் சமண சமயத்தில் சேர்ந்ததால் அவரது சகோதரியான திலகவதியார் சிவபெருமானை வணங்கி; ‘‘எனது சகோதரன் மீண்டும் சைவ சமயத்தவனாக மாறவேண்டும்’’ என்று வேண்டினார். அவரது வேண்டுதலை நிறைவேற்ற விரும்பிய சிவபெருமான திருநாவுக்கரசருக்குச் சூலை நோயை உண்டாக்கினார். சூலை நோயால் துன்பப்பட்ட திருநாவுக்கரசர் சகோதரியின் வீட்டுக்கு வந்தார். சகோதரி அவரைச் சிவன்

கோயிலுக்கு அழைத்துச் சென்று திருநீறு கொடுத்துப் பூசச் சொன்னார். திருநாவுக்கரசர் திருநீறு பூசியதும் சூலை நோய் குணமாகியது.

"வீபூதி தரியாத முகம் சுடுகாட்டிற்குச் சமமானது" என்று ஆறுமுக நாவலர் கூறியுள்ளார்.

"வீபூதியைச் சூரியோதயத்திலும், சூரியஸ்தமனத்திலும், ஸ்நானம் செய்தவுடனும், பூசைக்கு முன்னும் பின்னும், போசனத்துக்கு முன்னும் பின்னும், நித்திரைக்குச் செல்ல முன்னும் பின்னும், மலசல மோசனஞ்செய்து சௌசம் பண்ணி ஆசமித்த பின்பும், தீட்சை பெறாதவர் தீண்டிய போதும், பூனை, கொக்கு, எலி முதலியன தீண்டிய போதும் வீபூதியைக் கட்டாயமாகத் தரித்தல் வேண்டும்" என்று ஆறுமுக நாவலர் கூறியுள்ளார்.

ஒவ்வொருவரும் அனுபவித்துக்கொண்டிருக்கும் துன்பம், அவர்களது மத நம்பிக்கையீனத்தினாலேயே வந்தது என்பதை ஒவ்வொருவரும் உணர்ந்து கொள்ளல் வேண்டும். தனக் கேற்பட்ட துன்பத்தைத் தானே நீக்க வேண்டும் என்று நினைப்பவன் தான் உண்மையான சமய வாழ்வு வாழ்பவன். அறியாமையாலும், நம்பிக்கையீனத்தாலும் வந்த துன்பங்களை கடவுளின் மீது நம்பிக்கை வைப்பதன் மூலம் நீக்கலாம் என்று நினைப்பவன் தனது துன்பங்களை நீக்குமாறு இறைவனிடம் வேண்டிவிட்டுத்தனது செயல்களைச் செய்தால், வந்த துன்பம் நீங்குவதோடு புதிதாக எந்தத் துன்பமும் அவனை அணுகாது. பிறர் எனக்குத் துன்பம் தர நான் வணங்கும் கடவுள் விடமாட்டார் என்று தைரியமாக நினைப்பவன், வலிமையுடன் தனக்கு வந்த துன்பங்களைத் தன் தோள் மீது சுமக்காது

அதைக் கடவுளின் மீது சுமத்தி விடுவான். “எனது விதியைப் படைப்பவன் நான். அதற்கான வலிமையைக் கடவுள் எனக்குத் தந்துள்ளார்” என்று நம்புபவன் என்றும் இன்பமாக வாழ்வான்.

அந்தத் தெரு முக்கியம் வாய்ந்த தெருவல்ல. வாகனங்கள் அடிக்கடி சென்றாலும் வீதியில் நெருக்கடி ஏற்படுவதில்லை. இருந்தும் அத்தெருவில் அடிக்கடி விபத்துக்கள் நடக்கும். மாதத்திற்குப் பத்து விபத்துக்களுக்குக் குறைவில்லாமல் நடக்கும். அதுவும் குறிப்பிட்ட ஓர் இடத்திலேயே நடக்கும்.

கதிரேசனுக்கு ஐம்பது வயது. அன்று அத்தெருவின் கரையால் நடந்து சென்று கொண்டிருந்தார். பின்பக்கமாக வந்த ஒரு மோட்டார் வண்டி திடீரென்று எதிர்பாராதவாறு அவரை மோதிவிட்டு நிற்காமல் சென்று விட்டது.

வீதியில் காயங்களுடன் விழுந்து கிடந்த கதிரேனைப் பாதையால் சென்றவர்கள் வைத்தியசாலையில் சேர்த்தார்கள்.

ஒரு மாதகாலம் வைத்தியசாலையில் தங்கிச் சிகிச்சை பெற்ற கதிரேசன், வீட்டுக்கு வந்ததும் தான் வணங்கும் பிள்ளையார் கோயிலின் குருக்களிடம் சென்று, அவ் வீதியில் அடிக்கடி நடக்கும் விபத்துக்களைப் பற்றிக் கூறி “அதற்குப் பரிகாரம் எதுவும் இருக்குமா?” என்று கேட்டார்.

குருக்கள் வெகு நேரம் யோசித்து விட்டு சொன்னார்; “அவ் வீதியருகே ஒரு விநாகர் கோயில் அமைத்தால் விபத்துக்கள் நேராது”

வீட்டுக்கு வந்த கதிரேசன் யோசித்துப் பார்த்தார். அவரிடம் கோயில் கட்டப் பணம் இல்லை; “யாரிடமாவது

பணம் கேட்டால் பல கதைகள் சொல்வார்கள்”. என்று நினைத்தவாறு சில நாட்கள் யோசித்தார்.

அவரது வீட்டில் ஒரு கல் இருந்தது. அதன் உருவம் பிள்ளையாரைப் போல இருந்ததால் அவர் அதைத் தனது வீட்டின் பின்புறமாக நின்ற வேப்பமர நிழலில் வைத்துத் தினமும் வணங்கிவந்தார்.

அந்த பிள்ளையாரை எடுத்துச் சென்று அந்த வீதியின் அருகே நின்ற பெரியதொரு ஆலமரத்தின் அடியில் வைத்தார். தினமும் நீர் கொண்டு சென்று அதைக் கழுவிப் பூக்கள் வைப்பார்.

ஒரு மாதம் கடந்தது. அவர் வைத்த விநாயகர் சிலையை அவரைத் தவிர யாரும் கவனிக்கவில்லை.

மேலும் இரண்டு மாதங்கள் கடந்தன. மாதவன் என்ற வணிகனின் வாகனங்கள் பல அந்த வீதியால் வியாபாரத்திற்காகச் சென்று வருவது வழக்கம். அப்படிச் சென்று வரும் போது அவை அடிக்கடி விபத்துக்குள்ளாகும். ஆனால் விநாயகர் சிலை வைத்த பின்பு அவனது வாகனங்கள் எதுவும் விபத்துக்குள்ளாகவில்லை. அதனால் மனம் மகிழ்ந்த மாதவன் தன்னிடமிருந்த அனைத்து வாகனங்களுடனும் அன்று அக் கோயிலுக்கு வந்தான். அப்பொழுது அங்கே கதிரேசன் நின்றார்.

மாதவன் கொண்டு வந்த பூசைப் பொருட்களைக் கதிரேசனிடம் கொடுத்தார்.

“ஐயா நீங்கள் பெரியதொரு காரியம் செய்திருக்கிறீர்கள். என்னிடமுள்ள பத்து வாகனங்கள் வியாபாரத்திற்காகத் தினமும் இவ் வீதியால் பலமுறை சென்று

வருவது வழக்கம். அவை அடிக்கடி விபத்துக்குள்ளாகிப் பெரும் நஷ்டத்தை உண்டாக்கும். நீங்கள் இந்த விநாயகர் சிலையை வைத்த பின்பு எனது வாகனங்கள் விபத்துக்குள்ளாகவில்லை. அதனால் நான் இந்தக் கோயிலை கட்டித்தர விரும்புகிறேன்.'' என்றான்.

கதிரேசனால் நம்ப முடியவில்லை. அவர் திக்குமுக்காடிப் போனார்.

அதன் பின் அத்தெருவால் செல்லும் வாகனங்கள் அனைத்தும் அக்கோயிலருகே நின்றன. மக்கள் கூடினர்.

சில மாதங்களில் பெரியதொரு கோயில் உருவானது. மாதவன் மூலஸ்தானத்தில் கருங்கல்லால் செய்த விநாயகரைப் பிரதிஷ்டை செய்ய விரும்பினான். அதைக் கதிரேசன் ஒப்புக் கொள்ளவில்லை. அதனால் முன்பு வணங்கிய விநாயகரையே பிரதிஷ்டை செய்தனர்.

அதன் பின்பு அவ்வீதியில் விபத்துக்கள் நடைபெறுவதில்லை.

''இறைவன் இருக்கிறான். அவனை எப்படி வழிபட்டாலும் பலன் உண்டு'' என்று நம்புபவன் எதையும் கடவுளாக நினைப்பான்.

எல்லாப் பொருட்களிலும், உயிர்களிலும் கடவுள் இருக்கிறார் என்பதை உணர்ந்தவன் உயிர்களை வருத்த மாட்டான்; புலால் உண்ண மாட்டான்.

''தன்நம்பிக்கையுள்ளவன், மனதையும் உடலையும் அடக்கியவன், உடமைகளைத் துறந்தவன், வெறும் உடலால் வினையாற்றுபவன் பாவத்தை அடைவதில்லை.''

“கிடைப்பதைக் கொண்டு திருப்பதியடைபவன், பொறாமை இல்லாதவன், நடுவுநிலையில் நிற்பவன், கா்மம் செய்தாலும் கட்டுப்படுவதில்லை” என்று பகவத்கீதை கூறுகின்றது. பகவத்கீதையின் ராஜவித்தியா ராஜ குஹ்யயோகத்தின் இருபத்தேழாவது சுலோகத்தில் மஹாவிஸ்ணு பின்வருமாறு கூறுகிறாா்.

“குந்தியின் புதல்வா, நீ எதைச் செய்தாலும், எதைப் புசித்தாலும், எது ஹோமம் பண்ணினாலும், எதை ஐயமிட்டாலும், எத் தவத்தை புரிந்தாலும், அது என்னை வந்தடையும் என்று நம்பிக்கை கொள்”

இதிலிருந்து நாம் செய்வன எல்லாம் கடவுளை சென்றடைகின்றன என்று புரிகின்றது.

“நம்பிக்கைதான் வாழ்க்கை; நம்பிக்கைதான் கடவுள்; நம்பிக்கைதான் இன்பம்; நம்பிக்கைதான் எதிா்காலம் என்று நினைப்பவன் என்றும் வெற்றியடைவான்.”

எனது நண்பா் ஒருவருக்கு ஒரே ஒரு மகள். அவளுக்கு வயது பத்தொன்பது. மூன்று சந்ததியினா் தொழில் ஏதுவும் செய்யாது சும்மாயிருந்து வாழக்கூடிய செல்வம் அவரிடமிருந்தது. அப்படியிருந்தும் அவரது மகள் ருதுவாகவில்லை.

அவா் தன்னால் முடிந்தளவு வைத்தியம் செய்து பாா்த்தாா். பயனில்லை. ஒரு நாள் என்னிடம் வந்து கவலைப்பட்டாா். அவா் அழுவதைப் பாா்க்க எனக்கு கவலையாக இருந்தது.

அவர் ஒரு பிடிவாதக்காரர். ‘குறிப்பிட்ட தினத்துக்குள் தனது மகள் ருதுவாகாவிட்டால் கோயில் பக்கம் செல்வதில்லை’ என்று முடிவுகட்டினார். அவர் முடிவு கட்டிய தினம் கழிந்தது. அதன் பின் அவர் கோயிலுக்கு செல்வதில்லை. அருகில் இருந்த பிள்ளையார் கோயிலில் ஆவணி மாதச் சதுர்த்தியை அவர்தான் செய்து வந்தார். அதையும் விட்டு விட்டார்.

“நண்பா, கவலைப்படாதே. எனக்குத் தெரிந்த ஒருவர் அயலூரில் இருக்கிறார். அவர் சோதிடர் அல்ல; ஞானியும் அல்ல; பெரிய அறிவாளி. வேத உபநிடதங்களையும், வடமொழியையும் கற்றவர். வா அவரிடம் சென்று ஆலோசனை கேட்போம்” என்றேன்.

எனது வார்த்தைகளைக் கேட்ட அவர் சிறிது நேரம் பேசாமல் இருந்தார். பின் சொன்னார்; “உன் மீதுள்ள நம்பிக்கை காரணமாக வருகிறேன்.”

மறு நாள் இருவரும் அவரிடம் சென்றோம். எனது நண்பனின் பிரச்சினையை நான் அவருக்கு விளக்கமாகக் கூறினேன்.

அவர் எழுந்து உள்ளே சென்றார். சிறிது நேரத்தின் பின் ஒரு காகிதத்துடன் வெளியே வந்தார்.

“இந்த துண்டில் ஒரு மந்திரம் எழுதியுள்ளேன். அதைத்தினமும் காலையிலும் மாலையிலும் நூற்றியெட்டு முறை ஓதுங்கள். பின் வாருங்கள். அத்துடன் உங்கள் மகளை யமுனா விரதம் அனுட்டிக்கச் சொல்லுங்கள். யமுனா விரதம் ஒவ்வொரு வருடமும் புரட்டாதி மாதம் சுக்கிலபட்ச பஞ்சமி

திதியன்று வரும். அன்று பகல் இவ்விரதத்தைத் தொடங்குதல் வேண்டும். இவ்விரதத்தை அனுஷ்டிப்போர் ரிஷி பஞ்சமி பூசையைச் செய்தல் வேண்டும். இவ்விரதத்தைக் கன்னிப் பெண்களும், சுமங்கலிகளும் அனுஷ்டிக்கலாம். ஆண்களும், விதவைகளும் அனுஷ்டிக்கக் கூடாது. ருதுவாகாத பெண்கள் இதை அனுஷ்டித்தால் ருதுவாவர். ருதுவான காலங்களில் தோசங்கள் இருந்தாலும் அவை நீங்கும். குழந்தை இல்லாதவர்களும் இவ்விரதத்தை அனுஷ்டிக்கலாம்''.

''யமுனா விரதப் பூசையை நடுப்பகலில் செய்த பெண்கள் இரவில் ரிஷி பஞ்சமி விரதப் பூசையை செய்தல் வேண்டும். ரிஷி பஞ்சமி விரதப் பூசையைச் சப்த ரிஷி விரத பூசை என்றும் சொல்வார்கள்.'' என்றார்

அவர் தந்த காயிதத்தைப் பிரித்துப் பார்த்தேன். அதில்

''அபுஷ்புர புஸ்பீணியஸ்ய
தாரணாச்ச ஸுகப்ரஸு
கன்யாப் ரஜாரித்ரிணீ யஸ்ஸா
தேதத் ஸ்தோத்ர ப்ரபாவித'' என்றிருந்தது.

''நண்பரே, இந்த மந்திரத்தை மிகுந்த நம்பிக்கையுடன் ஓத வேண்டும். மன அமைதியுடன் விரதமிருக்க வேண்டும். வெள்ளி, செவ்வாய்க்கிழமைகளில் விரதமிருந்து மஹாலட்சுமிக்குத் தாமரைத் தண்டிலிருந்து திரித்த நூல் திரியால் நெய் விளக்கேற்றுவது நன்று'' என்று அவர் சொன்னார்.

நாம் அவரிடம் விடைபெற்றுக் கொண்டு வீடு திரும்பினோம். எனது நன்பருக்கு அவர் கூறியதில் நம்பிக்கை

ஏற்படவில்லை. அதனால் நான் அவரது மனவைிக்கு யாவற்றையும் விபரமாகக் கூறி நம்பிக்கையுடன் செயலாற்றுமாறு கூறினேன்.

ஐம்பத்து நான்காவது நாள் எனது நன்பர் என்னைத்தேடி அவசர அவசரமாக வந்தார். அவரது முகத்தில் என்றுமில்லாத மகிழ்ச்சி தாண்டவமாடியது. அவர் கதைக்க முடியாது தடுமாறினார்.

‘‘நீ சொன்னது உண்மைதான். நான் நம்பிக்கை கொள்ளவில்லை. மகளும், மனைவியும் மிகுந்த நம்பிக்கையுடன் செயற்பட்டனர். எனக்கு சரியான மகிழ்ச்சி. வா அவரிடம் சென்று சொல்வோம்’’ என்றார்

இந்து மதம் எல்லாவற்றிற்கும் பரிகாரம் கூறிச் சம்பந்தப் பட்டவர்களை இன்பத்துக்குள்ளாக்குகிறது.

‘‘முடி நரைத்தல், முடி உதிர்தல் உள்ளவர்கள் மஹாலட்சுமியையும் வள்ளியையும் வணங்கினால் முடி நரைக்காது, முடி உதிராது’’ என்று வாஸ்து சாஸ்திரம் கூறுகின்றது.

இப்படிச் சிறு சிறு நோய்களுக்குக் கூடப் பரிகாரம் கூறுகிறது.

நம்பிக்கை அளவில்லாத துணிவை உண்டாக்கும். துணிவுள்ளவன் எதற்கும் பயப்படமாட்டான்.

காரைக்காட்டில் ஒரு விவசாயி இருந்தார். அவர் தனது விளைநிலத்தில் அம்முறை மூன்று மடங்கு விளைச்லைப் பெற்றார். தானியங்களை விற்றதன் மூலம் இரண்டு லட்ச ரூபாவை அவர் நிகர இலாபமாகப் பெற்றார்.

அந்த இரண்டு இலட்ச ரூபாவை அவர் வட்டிக்குக் கொடுக்க விரும்பினார். “வட்டிக்குப் பெறுபவன் வருடமொன்றிற்கு ஓர் இலட்சம் ரூபா தரவேண்டும்” என்று சொன்னார்.

யாரும் அவரிடம் வட்டிக்குப் பணம் பெறவிரும்பவில்லை. ஒரு சில மாதங்கள் கழிந்தன. மணிவண்ணன் என்பவன் அவரிடம் வட்டிக்குப் பணம் பெற்றான்.

அவர் கண்டிப்பானவர். தனது நிபந்தனையைக் கூறிவிட்டே பணம் கொடுத்தார்.

அயலவர்கள் எல்லோரும் மணிவண்ணனை ஏசினர். சிலர் அந்த விவசாயியைத் திட்டினர்.

ஒரு வருடம் கழிந்தது. மணிவண்ணன் மூன்று லட்சம் ரூபாவுடன் விவசாயின் வீட்டுக்கு வந்தான். அவனுடன் அவனது நண்பன் திருமாறனும் வந்திருந்தான்.

“ஐயா, நீங்கள் எனக்குப் பணம் தந்தமையால், நான் ஓர் இலட்சம் ரூபாவை இலாபமாகப் பெற்றேன். ஊரவர் நீங்கள் அறாவட்டி வாங்குபவர் என்று ஏசினாலும், நான் உங்களைக் கடவுளாக மதிக்கிறேன். நீங்கள் கூடிய பணம் வட்டியாகத் தரச்சொன்னமையால் தான் நம்பிக்கையுடன் அயராது முயற்சித்தேன். அதனால் வறியவனான நான். இப்பொழுது ஒரு லட்சம் ரூபாய்க்குரியவனாகிவிட்டேன். மிகவும் மகிழ்ச்சி” என்று கூறியவாறு விவசாயின் பாதங்களைப் பணிந்தான்.

விவசாயி அவனைப் பாராட்டினார். பின்பு சொன்னார்; “மகனே, நீ எனக்கு வட்டிப்பணம் தரத்தேவையில்லை. நான் தந்த முதலைத்தா. முயற்சியுள்ளவன் வெற்றியடைவான். அவனால் எதையும் சாதிக்க முடியும் என்பதை உணர்ந்த

ஒருவனைக் கண்டுபிடிக்கவே நான் இப்படிச் சொன்னேன்.'' என்று கூறி வட்டிப்பணத்தை அவனிடம் திருப்பிக் கொடுத்தார்.

மணிவண்ணன் திகைத்துப் போனான்; ''ஐயா, இவர் எனது நண்பர். இவரும் தொழில் செய்ய விரும்புகிறார். நான் தந்த பணத்தை இவரிடம் கொடுத்தால், அவர் வட்டியுடன் திருப்பித்தருவார்''. என்றான் மணிவண்ணன்.

''மணிவண்ணனா, நான் திரும்பித்தந்த வட்டிப்பணத்தை நீ உனது நண்பனுக்குக் கொடு. நான் உனக்கு வட்டிப்பணத்தைத் திருப்பித்தந்ததாக யாருக்கும் சொல்லாதே. உன்னைப் போல நம்பிக்கையுடனும், துணிவுடனும் யாராவது வந்தால் நான் மீண்டும் பணத்தைக் கொடுப்பேன்.'' என்றார் அந்த விவசாயி.

நம்பிக்கையும், துணிவும், முயற்சியும் உள்ள இளைஞர்கள் அவரிடம் வந்து பணம் பெற்று முன்னேறினர்.

பணிகளை இறைவன் வகுத்து மனிதனிடம் ஒப்படைக்கிறான். அப்பணிகளை அவன் செய்வதன் மூலம் முன்னேறுவான். என்னென்ன பணி எப்பொழுது செய்தல் வேண்டும் என்று இறைவன் யார் மூலமாவது அவர்களுக்கு அறிவிப்பான். அப்பொழுது வெற்றி தோல்வி, நன்மை தீமைகளைப் பாராது இறைவன் இட்ட பணி என்று நினைப்பவன் வெற்றியடைவான்.

நாவலூரில் கந்தவனம் என்றொரு விவசாயி வாழ்ந்து வந்தார். அவருக்கு ஐந்து பெண் பிள்ளைகள். ஐந்து பெண்களைப் பெற்ற அரசனும் ஆண்டியாவான் என்று ஊரவர் சொல்வார்கள். ஆண்டியான கந்தவனத்திற்கு ஐந்து பெண்பிள்ளைகள் அடுத்தடுத்துப் பிறந்தனர். கந்தவனம்

அதனால் துக்கப்படவில்லை. அவர் சிவனை மிகவும் அன்புடன் வணங்குவார். அதனால் அவர் அவர்களுக்கு இலக்குமி, சரஸ்வதி, மஹாலட்சுமி, உமாதேவி, துர்க்கை என்ற அம்பிகையின் நாமங்களை இட்டு வளர்த்துவந்தார்.

ஐந்து பெண்களும் பாடசாலைக்குச் சென்று வந்தனர். கந்தவனம் கமம் செய்து வந்தார். அதில் பெரிதாக வருமானம் இல்லாவிட்டாலும் அவரது வாழ்க்கை எவ்வித குறைகளும் இன்றி நடைபெற்றுக்கொண்டிருந்தது.

அன்று மூத்தவள் வயதிற்கு வந்துவிட்டாள். அவ்வூரில் வியாபாரம் செய்து வரும் மணிவண்ணனிடம் கந்தவனம் பணத்தட்டுப்பாடு ஏற்படும் வேளைகளில் கடனாகப் பொருட்களை வாங்குவார். அத்துடன் தோட்டத்திற்குத் தேவையான உரம், மருந்து என்பவற்றைக் கடனாக வாங்குவார். விதைத்த பயிர் அறுவடை செய்த பின் கடனாகப் பெற்ற பணத்தைக் கொடுப்பார். அவர் மிகவும் நேர்மையாக வாழ்ந்தமையால் மணிவண்ணன் அவரை நம்பி அவர் கேட்கும் பொருட்களையெல்லாம் கொடுப்பான்.

தனது மகள் ருதுவானதைக் கந்தவனம் மணிவண்ணனுக்கு கூறினார். ஐந்து பெண்களுக்கும் தோட்டைத் தவிர வேறு எந்த நகையையும் அவர் வாங்கிக் கொடுத்ததில்லை. அது மணிவண்ணனுக்குத் தெரியும். அவர் மணிவண்ணனிடம் தனது மூத்த மகளுக்குச் சங்கிலி வாங்கப் பணம் கேட்டார்.

“அண்ணா என்னுடைய வியாபாரத்தைப் பற்றி உங்களுக்கு தெரியும். ஏதோ நம்பிக்கையுள்ள சிலருக்கு கடன்

கொடுத்து வியாபாரம் செய்யக் கடவுள் வழிவிட்டுள்ளாரே தவிர இவ்வளவு பணம் என்னிடமில்லை'' என்றான். மணிவண்ணன்.

கந்தவனம் மனம் சோரவில்லை. அன்று மாலை அவ்வூர்ச் சிவன் கோயிலுக்குப் பழம், வெற்றிலை, பாக்கு, தேங்காய், கற்பூரம் என்பவற்றைக் கொண்டு சென்று அர்ச்சனை செய்தார். சிவனைப் பார்த்ததும் அவரது கண்கள் கலங்கின; ''இறவைா, ஐந்து பெண்களைத் தந்தாய். நான் கவலைப் படவில்லை. எனது மகள் வயதிற்கு வந்த பின்பு ஒரு சங்கிலி வாங்கிக் கொடுக்க முடியவில்லையே என்று தான் கவலைப் படுகிறேன்.'' என்று மனமுருகி வணங்கினார்.

அப்போது அங்கே மணிவண்ணன் வந்தான்; ''அண்ணை, நீங்கள் கூறிய பின்பு எனது மனம் அல்லற்பட்டது. நாளைக்கு பட்டணத்திற்கு வாருங்கள். எனக்கொரு நண்பன் இருக்கிறான். அவன் ஆபரணக்கடை வைத்திருக்கிறான். அவனிடம் தான் நான் நகைகளை வாங்குவேன். அவனிடம் கடனாக உங்களுக்கு ஒரு சங்கில் வாங்கித்தருகிறேன்.'' என்றான்.

கந்தவனத்தின் மனப் பாரம் சட்டென்று நீங்கியது. ''சிவனே, எல்லாம் உன்னுடைய அருள்'' என்று நினைத்துக் கொண்டார்.

மறுநாள் இருவரும் பட்டணத்திற்குச் சென்றனர். பத்து வருடங்களுக்குப் பின்பு கந்தவனம் பட்டணத்திற்கு வந்திருந்தார். பட்டணம் முற்றாக மாறுபட்டிருந்தது. ஒரே சனக்கூட்டம்.

அவர்கள் வீதியால் நடந்து செல்லும் போது அதிஷ்டலாபச் சீட்டுக்கள் விற்கும் ஒருவன் அவர்களை நோக்கி வந்து, கந்தவனத்தைப் பார்த்து சொன்னான்; ''ஐயா, இந்த

முறை முதலாம் பரிசு உங்களுக்குத்தான் விழும். ஒரு கோடி ரூபா பரிசு. இந்தாருங்கோ'' சீட்டை நீட்டினான்.

மணிவண்ணன் அவனை ஏச வாய் திறந்தான். அப்போது கந்தவனம் பணத்தை எடுத்துக் கொடுத்துக் கொண்டிருந்தார். பொருட்களைக் கூவிவிற்போர் சில நுட்பங்களைப் பாவிப்பார்கள். அதிஷ்டலாப சீட்டுக்களை விற்போர் அந்தவார்த்தைகளை ஒவ்வொருவருக்கும் கூறுவார்கள். அதனால் மணிவண்ணன் அதிஷ்டலாபச் சீட்டை வாங்குவதில்லை. ஆரம்பத்தில் அவன் பட்டணத்திற்கு வரும்போது இரண்டு மூன்று சீட்டுக்களை வாங்குவான். அவை பரிசைக் கொடுத்ததில்லை. அதனால் அவன் அதன் பின் வாங்குவதில்லை.

அவன் மணிவண்ணனையும் பார்த்துச் சொன்னான்; ''ஐயாவுக்கும் அதிஷ்டமிருக்கு ஒரு சீட்டு வாங்குங்கோ''

''எனக்கு வேண்டாம்'' என்று கூறிவிட்டு அவர் நகைக்கடைக்குச் சென்றார்.

நகைக்கடையில் சங்கிலி ஒன்றை வாங்கிக் கொண்டு வரும்போது; ''ஒரு அதிஷ்டஇலாபச் சீட்டு வாங்க வேண்டும்.'' என்ற எண்ணம் மணிவண்ணனின் மனதில் துளிர்த்தது. முன்பு தன்னைக் கேட்டவனைத் தேடிப்பார்த்தார். பலர் கூவிக் கூவி அதிஷ்ட இலாபச் சீட்டுக்களை விற்பனை செய்து கொண்டிருந்தனர். ஆனால் அவனைக் காணவில்லை. எங்கும் தேடிப்பார்த்தார். அவனைக் காணவில்லை.

கந்தவனம் பட்டணத்தில் சிவனுக்கென்று ஒரு தேங்காயும், கற்பூரமும் வாங்கி வந்தார். பட்டணத்தால் வீட்டுக்குச் செல்லாது சிவன் கோயிலுக்கு என்று வாங்கி வந்த தேங்காயை உடைத்துக் கற்பூரத்தைக் கொழுத்தினார்.

அவரின் மனதில் என்றுமில்லாத ஆனந்தம் நிறைந்திருந்தது; "இந்தச் சங்கிலிக்கான பணத்தைக் கொடுத்துவிட்டு இன்னொன்று வாங்க வேண்டும்." என்று நினைத்தார். அந்த நினைவு மட்டற்ற மகிழ்ச்சியைக் கொடுத்தது.

வீட்டுக்கு வந்த கந்தவனம் தனது மூத்தமகளின் கழுத்தில் வாங்கி வந்த சங்கிலியைப் போட்டார். சிவந்த அவளது கழுத்தில் தங்கச் சங்கிலி பளபளத்தது. அதைப் பார்த்த அவருக்குச் சொர்க்கம் தனது காலடிக்குள் வந்துவிட்டதைப் போலிருந்தது.

வாரம் ஒன்று கழிந்தது. மணிவண்ணன் அன்றைய தினப்பத்திரிகையுடன் கந்தவனத்தின் வீட்டுக்கு வந்தான்.

"சீட்டைத்தா, பரிசுக்குரிய இலக்கங்கள் பத்திரிகையில் வந்திருக்கு" என்றான் மணிவண்ணன். கந்தவனம் பரிசுச் சீட்டைக் கொண்டுவந்து மணிவண்ணனிடம் கொடுத்தார். அவன் உடனே "அண்ணை, உங்களுக்குத்தான் முதற் பரிசு விழுந்திருக்கு" என்றான் மணிவண்ணன்.

கந்தவனம் சிவனை நினைத்தார். சிவன் அவரது கண்களுக்குள்த் தோன்றிச் சிரித்தார்.

"ஒவ்வொருவரும் செய்யும் நன்மை தீமைகள் வட்டியோடு திரும்பவும் செய்பவனை வந்தடையும்" என்று இந்து தர்மம் கூறுகின்றது. நன்மையும் தீமையும் எப்பொழுது அவனைச் சென்றடையும் என்பதை இறைவனே அறிவான். பொதுவாக நன்மைகள், நன்மைகள் செய்தோர் துன்பப்படும் போது வந்து அவர்களைக் காப்பாற்றும். தீமைகள், தீமைகள்

செய்தோர் இன்பம் அனுபவிக்கும் போது வந்து துன்பத்தைக் கொடுக்கும். இது இயற்கையின் நியதி.

“நீ நல்லவனாக இருந்தால் உனக்கு எல்லோரும் நன்மைகளைச் செய்வார்கள். நீ தீயவனாக இருந்தால் நல்லவர்கள் உன்னைத் தீயவன் என்று விலக்கினாலும், தர்மப்படி உனக்கு நன்மை செய்யவே விரும்புவார்கள். ஆனால் நல்லவர்கள் செய்யும் நன்மைகளைத் தீயவர்கள் தீமையாகவே கருதுவார்கள். அதனால் நல்லவர்களை அவர்கள் தீயவர்கள் என்று நினைத்து விலகிச் செல்வார்கள்.

பெருந்தொகைப் பணத்தை வட்டியாகத் தரவேண்டும் என்று கூறி வட்டிப்பணத்தை வாங்காது விட்ட விவசாயி உதவி செய்ய வேண்டும் என்று நினைத்துச் செய்யவில்லை. யாருக்கு உதவி செய்ய வேண்டும் என்று தீர்மானித்த பின்னரே அவர்களுக்குச் செய்து வந்தார்.

தீயவர்களுக்குப் பணத்தைக் கொடுத்தால் அது பெரும்பாலும் திரும்பிவராது. அதைவிட அவர்கள் தீய செயல்களில் ஈடுபடுவார்களே தவிர உடலை வருத்திச் செயற்பட மாட்டார்கள் என்பதால் தான் அந்த விவசாயி பகிரங்கமாகப் பணத்தைக் கொடுத்து இரகசியமாகத் திரும்பப் பெற்றார்.

ஒருவன் தான் செய்த உதவிகளுக்கு நன்மையை எதிர்பாராது, அதைச் சேவையாக செய்தால் செய்பவனுக்குத் துன்பம் உண்டாகாது. எதைச் செய்ய விரும்பினாலும் அதைச் சேவையாகவே செய்தல் வேண்டும். ஏனென்றால் தீயவர்கள் எப்பொழுதும் தமது செயல்களை நிறைவேற்றுவதிலேயே

கண்ணும் கருத்துமாக இருப்பார்கள். தனது காரியம் முடிந்ததும் உதவி செய்தவனைக் கொலை செய்யவும் தயங்கமாட்டார்கள்.

பத்மாசூரன் என்ற அசுரன் சிவபெருமானை நினைத்துக் கடும் தவம் புரிந்தான். அவனது தவவலிமையைக் கண்டு வியந்த சிவபெருமான் அவன் முன் தோன்றி; “உனக்கு என்ன வரம் வேண்டும்?” என்று கேட்டார்.

அசுரன் மகிழ்ந்து; “நான் தொட்ட பொருளெல்லாம் தீப்பற்றி எரிய வேண்டும்” என்று கேட்டான்.

சிவன், அவன் கேட்ட வரத்தைக் கொடுத்தார். உடனே அவன் சிவனைத்தொட்டுத் தான் பெறற்றவரத்தைப் பரீட்சிக்க விரும்பி அவரின் அருகே சென்றான். அவனது நோக்கத்தை உணர்ந்த சிவன், அவன் தொட்டால் தான் எரிந்து விடுவேன் என்று நினைத்து ஓடி ஒளித்தார்.

முக்காலமும் உணர்ந்த சிவபெருமானுக்கே இந்தக் கதியானால் சாதாரண மனிதர்களின் நிலையை நாம் உணருதல் வேண்டும்.

தீயவன் ஒருவன் தனது கருமத்தை நிறைவேற்று வற்காகத் தனது மனைவி, சகோதரிகள், பெண்பிள்ளைகளைக் கூடக் கூட்டிவிடத் தயங்கமாட்டான். தீய பெண் ஒருத்தி தனது செயல்கள் ஈடேறத் தன்னையும் கொடுப்பாள்.

நம்பிக்கை உள்ளவர்கள் என்று நாம் எளிதில் எவரையும் நம்புதல் ஆகாது. அதனால் தான் இந்து மதம், “கர்மத்தைச்செய், பலனை எதிர்பாராதே” என்றது. இதன் பொருள் உதவியாக எதையும் செய்யாது சேவையாக யாவற்றையும் செய் என்பதாகும்.

நம்பிக்கை மட்டும் ஒருவனை வாழவைக்காது. நம்பிக்கையுடன் முயற்சியிலும் ஈடுபடல் வேண்டும். அப்பொழுது தான் இன்பத்தை அனுபவிக்கலாம் என்று இந்து மதம் கூறுகின்றது.

ஒருவன் சிவபெருமான் மீது மிகுந்த பக்தியுள்ளவன். அவன் மனதை அடக்கித் தவம் செய்தான். சிவபெருமான் அவனின் முன் தோன்றினார். அவன் மனம் மகிழ்ந்து தான் பெரிய பணக்காரனாக வேண்டும் என்று கேட்டான். சிவனும் அதை அருளி மறைந்தார். பக்தனுக்குப் பரம ஆனந்தம். அவன் வீட்டுக்கு வந்தான். தினங்கள் கழிந்து மாதங்களாயின. சிவபெருமான் கூறியது நடக்கவில்லை. அதனால் அவன் மீண்டும் தவம் செய்தான். மீண்டும் சிவபெருமான் அவன் முன் தோன்றினார்.

''சுவாமி, என்னைப் பணக்காரணாக்குவதாகக் கூறினீர்கள். மாதங்கள் பல கடந்தும் நான் பணக்காரணாக வில்லை'' என்று முறையிட்டான்.

சிவபெருமான் சிரித்தார். பின்பு சொன்னார்; ''பக்தனே, நீ முயற்சி செய்யவில்லை. அதனால் தான் உனக்குப்பணம் கிடைக்கவில்லை. முயற்சி செய்துபார்'' என்று கூறிவிட்டு மறைந்தார்.

நம்பிக்கையுள்ளவன் மனம்சோராது பெரு முயற்சி செய்தல் வேண்டும்.

உனக்குப் பிறர் உதவி செய்ய வேண்டும் என்று நினைக்காது நீ பிறருக்கு உதவிகளைச் செய். சுந்தரர் ஆற்றிலிட்டுக் குளத்தில் எடுத்தது போல நீ செய்யும்

உதவிகளுக்குப் பிரதியுபகாரமாகப் பிறர் உனக்கு உதவி செய்வார்கள்.

நீ உதவி செய்தவன் உனக்குத் துரோகம் செய்கிறான் என்று நீ நினைத்தால், நீ செய்த உதவிகள் பயனற்றுப் போய்விடும். யார் எதைச் செய்தாலும் நான் நல்லதையே செய்வேன் என்று நினைப்பவனுக்குத் துன்பங்கள் வரமாட்டாது; கவலையும் வரமாட்டாது. இன்பம் மட்டும் தான் வரும் என்று இந்து தர்மம் கூறுகின்றது.

நீ நன்மை செய்வதும் அதை உணராதவனை மன்னித்து விடு; உனக்கு விரும்பமில்லாதவனை விலக்கிவிடு. துன்பம் வராது. மனிதர்களின் குணங்களை இலகுவில் மாற்ற முடியாது. அதனால் நீ மாறு. நீ மாறினால் அவர்கள் எதைச் செய்தாலும் உன்னை அது பாதிக்காது.

சிவனிடம் வரம் பெற்ற அசுரர்கள், தமக்குச் சிவனளித்தவரங்களைத் தமது பலமாக கருதி அவருடன் போர் செய்யத்துணிந்தனர். அசுரர்கள் மாறமாட்டார்கள் என்பதை உணர்ந்த சிவன் தன்னை மாற்றிக் கொண்டார். அதனால் அசுரர்கள் அழிந்தனர். தீயவர்கள் மாறமாட்டார்கள். நீ மாறினால் தீயவர்கள் இயற்கையால் அழிக்கப்படுவார்கள். அவர்களை அறம் அழிக்கும் என்று சொல்கிறது இந்து தர்மம்.

ஒரு போத்தலில் அந்த அளவிற்குத்தான் நீர் கொள்ளும். ஒரு சாக்கில் அதன் பருமனுக்கு ஏற்றளவுதான் பொருள் கொள்ளும்.

அதுபோல உன்னால் முடிந்த சேவையைச் செய். உன்னால் பத்துப்பேருக்கு உணவு கொடுக்கமுடியாவிட்டால் ஒருவருக்காவது கொடு. கடன்பட்டு பத்துப் பேருக்குக் கொடுக்காதே. அதிகமாகக் கொடுப்பவன் தான் இறைவனுக்குப்

பிடித்தமானவன் அல்ல. தன்னிடம் உள்ள கூழைக் கூடப் பிறருக்குக் கொடுத்து உண்பவனையே இறைவனுக்குப் பிடிக்கும்.

இதை விளக்கப் பாரதக் கதையில் வரும் ஒரு கதை எம்மை வியக்க வைக்கிறது.

தர்மராஜா ஒரு யாகம் செய்தார். அதைவிடச் சிறந்த யாகம் இதுவரை உலகில் செய்யப்படவில்லை என்று முனிவர்களும் ரிஷிகளும் கூறினார். இதைக்கேட்ட மேனியில் பாதிப்பகுதி பொன் நிறமுடைய கீரிப்பிள்ளை ஒன்று தர்மராஜா யாகம் செய்த யாகசாலைக்கு வந்து அங்கு சிந்தியிருந்த பொருட்களின் மேல் உருண்டு பிரண்டது. எனினும் அதன் உடலின் மிகுதிப் பகுதி பொன்னிறமாகவில்லை. அதனால் அங்குள்ளவர்களுக்குக் கீரிப்பிள்ளை சொன்னது; “முனிவர்களே, கொடிய பஞ்சம் ஏற்பட்ட ஒரு நாட்டிலே பலர் உணவின்மையால் இறந்து கொண்டிருந்தனர். அங்கு ஓர் ஏழையும், அவனது மனைவியும், மகனும், மருமகளும் வாழ்ந்தனர். அவர்கள் பசித்தோர்க்கு உணவு கொடுத்த பின்பே தாம் உண்ணும் வழக்கத்தைக் கைக்கொண்டு வந்தனர். கொடிய பஞ்சம் அந்த நாட்டில் இருந்தமையால் பல நாட்கள் அவர்களுக்கு உணவு கிடைக்கவில்லை. ஒரு நாள் அவர்களின் நிலைமையை அறிந்த ஒருவர் அவர்களுக்குச் சிறிதளவு கோதுமை மா கொடுத்தார். அந்த ஏழையின் மனைவி அக்கோதுமை மாவை நான்கு சம பங்குகளாகப் பிரித்து நான்கு ரொட்டிகளைச் செய்து இறைவனுக்குப் படைத்து விட்டு அவற்றை எடுத்துக் கணவனுக்கும் மகனுக்கும் மருமகளுக்கும் கொடுத்துவிட்டு எஞ்சிய ஒன்றை தானும் எடுத்துக் கொண்டாள்.

அப்பொழுது அதிதி ஒருவர் அங்கு வந்துவிட்டார். அவரைக் கண்டதும் ஏழையின் மனைவி தனது ரொட்டியைக் கொடுத்தாள். அது அவருக்குப் போதாமல் இருந்தமையால் ஏழையும், மகனும், அவனது மனைவியும் தத்தமது ரொட்டிகளைக் கொடுத்தனர். நான்கு ரொட்டிகளையும் உண்ட பின்புதான் அந்த அதிதியின் பசி அடங்கியது. அதனால் அந்த அதிதி அவர்களை ஆசீர்வதித்துவிட்டுச் சென்றார். உணவு உண்ணாமையால் அவர்கள் நால்வரும் விடியுமுன்பே இறந்துவிட்டனர். அவர்கள் ரொட்டி செய்யும் போது கீழே சிந்திய சிறிதளவான மாவில் நான் உருண்டேன். அந்த மாப்பட்ட இடமெல்லாம் பொன்னிறமாகிவிட்டது. அதன் பின் பெரும் யாகங்கள் நடைபெறும் இடங்களுக்கெல்லாம் சென்று நான் உருண்டு பிரண்ட போதும் எனது உடலில் மிகுதிப்பகுதி பொன்னிறமாகவில்லை. இன்று தர்மராஜா பெரும் யாகம் ஒன்றைச் செய்வதாகக் கேள்விப்பட்டு இங்கு வந்து யாக சாலையில் உருண்டுபிரண்டேன். ஆனால் எனது உடலின் மிகுதிப்பகுதி பொன்நிறமாகவில்லை'' என்றது அந்தக்கீரி.

''உனக்காகச் சமைக்காதே; உனது செயல்களை வேள்வியாகச் செய், தானம் செய்து எஞ்சியதை உண்பவன் அமிர்தத்தை உண்பவனாகிறான்''. இவ்வாறு பகவத்கீதை சொல்கிறது. அதனால் இந்து தர்ம நூல்கள் கூறுபவற்றில் நம்பிக்கை வைத்துத் துணிவுடன் செயற்படுவோர் எப்பொழுதும் இன்பமாக வாழ்வர்.

உனது கடமை செயலாற்றுவது மட்டுமே. செயலின் பலனில் உரிமை பாராட்டுவதோ அல்லது அதற்காகப் பயனைப் பெற்றவன் நன்றி சொல்ல வேண்டும் என்று நினைப்பதோ

பாவம். யாரும் ஒரு கணம் கூடச் செயலாற்றாது இருப்பதில்லை. மனதில் செயலைப்பற்றி நினைத்தாலும் அதைச் செய்தவனாவாய் என்பதை மறவாதே. ஒவ்வொரு உயிரும் தன்வயமின்றி கர்மம் செய்து கொண்டே இருக்கிறது என்பதை உணர்ந்துகொள்.

நித்தியகருமங்கள் என்று சில வகுக்கப்பட்டுள்ளன. அவற்றை ஊக்கத்துடன் செய். நித்தியகருமத்தை செய்யாதவனால் தனது உடலைக்கூடப் பேணமுடியாது.

உண்பது, உறங்குவது, நீராடுவது, கோயிலுக்குச் செல்வது, மாணவர்களாயின் கற்பது போன்றன நாளாந்தக் கடமைகளாகும். இவற்றைச் சரிவர செய்யாவிட்டால் ஆரம்பத்தில் நோய் உண்டாகும்; உடலில் பலவீனம் ஏற்படும். அதனால் பிற்கால வாழ்வில் இடர்கள் உண்டாக்கும்.

சூரியன் உதிக்குமுன் நித்திரை விட்டெழுதல் வேண்டும். எழுந்ததும் காலைக்கடன்களை முடித்துவிட்டுக் குளித்து வீட்டில் சுவாமி தரிசனம் செய்து நீறு அணிதல் வேண்டும். அதன்பின் மாணவர்கள் கற்றல் வேண்டும். இப்படி இந்து தர்மம் கூறுகின்றது.

பெரியோர்கள் எதைச் சொல்கிறார்களோ அதையே மற்றவர்கள் பின்பற்றுகின்றனர்.

அதனால் பெரியவர்கள், பெற்றோர்கள், ஆசிரியர்கள் எப்போதும் நல்லவற்றையே செய்தல் வேண்டும்.

எனக்குத் தெரிந்த ஓர் ஆசிரியர் கடமை நேரத்தில் மிகவும் கண்ணியமாக நடந்து கொள்வார். கடமை முடிவடைந்ததும் மதுபானம் விற்கும் இடத்திற்கு செல்வார். அவர் மீது அளவில்லாத நம்பிக்கை வைத்திருந்த மாணவன்

ஒருவன் ஒரு நாள் அவர் செல்லும் மதுபான விற்பனை நிலையத்திற்குச் சென்றான். ஆசிரியர் திகைத்து போனார்.

மறுநாள் ஆசிரியர் அவனை அழைத்துப் புத்திமதிகள் கூறினார். ஆனால் மறுநாளும் அந்த மாணவன் மதுபானம் விற்பனை செய்யும் இடத்திற்குச் சென்றான்.

பெரியவர்கள் எப்பொழுதும் அவதானமாக இருத்தல் வேண்டும். மேடையில் மட்டும் பிரசங்கம் செய்யக் கூடாது. சொன்னபடி நடக்க வேண்டும். இல்லாவிட்டால் சொல்லக்கூடாது.

“மேலோன் எதைப் பிரமாணமாக்குகிறானோ அதையே உலகம் அனுசரிக்கிறது.” என்று பகவத்கீதை கூறுகிறது.

பெரியவர்கள் என்று சொல்லப்படுபவர்கள் தாம் கற்றவற்றைப் பிறருக்குக் கற்பித்து அதனால் வரும் இன்பத்தை அனுபவிப்பவர்கள். அவர்கள் உண்மைகளை அறிந்து கொள்ளக் கூடியவர்களை அறிந்து அறிவிப்பதில் இன்பம் காண்பார்கள். இவ்வகையான பெரியவர்கள் சமூகத்திலுள்ள ஒரு மனிதன் கூடத் துன்பப்படுவதை விரும்ப மாட்டார்கள். தம் மனதில் உள்ள தூய எண்ணங்களைப் போலச் செயல்களிலும் தூய்மையிருக்கும். பெரியவர்கள், பாமரர்களைப் போலப் பற்றுடன் எந்தக் கருமத்தையும் செய்யமாட்டார்கள்.

அகங்காரம் உள்ளவர்கள் தாம் செய்யும் கருமங்களுக்குத் தாமே கர்த்தா என்று நினைக்கிறார்கள்.

ஒரு வைத்தியரிடம் இருவர் தத்தமது நோய்களைத் தீர்ப்பதற்காச் சென்றனர். முதலில் சென்றவனது நோய் முற்றாகக் குணமடைந்துவிட்டது. வைத்தியர் தனது திறமையால் தான் அவனது நோய் குணமடைந்தது என்று

பெருமைப்பட்டார். நோயாளியும் அந்த வைத்தியரால் தான் நோய் குணமானதென்று கூறினான்.

அடுத்தவனது நோய் தீரவில்லை. மூன்று முறை மருந்தெடுத்தான். இருப்பினும் நோய் அதிகரித்தது. இன்னொரு வைத்தியரிடம் சென்றான். ஆனால் அவரது மருந்தைச் சாப்பிடுமுன் அவன் இறந்துவிட்டான். இரண்டாவது வைத்தியர் முதலாவது வைத்தியர் சரியான மருந்தைக் கொடுகாமையால் தான் அவன் இறந்தான் என்று கூறினார். அதை ஊரவர்களும் நம்பினர்

உண்மையில் வைத்தியர்கள் நோயாளிகளின் விதியை எழுதுபவர்கள் அல்ல. ஏற்கனவே தீர்மானிக்கப்பட்டவைதான் நடந்து கொண்டிருக்கும். தீர்மானிக்கப்பட்டவற்றை மாற்றக் கடவுள் ஒருவரால் தான் முடியும்.

அதற்கு உதாரணமாகப் புராணக்கதைகள் உண்டு. மார்க்கண்டேயருக்குப் பதினாறு வயது வரை தான் இவ்வுலக வாழ்வு உண்டென்று சிவபெருமான கூறிவிட்டார்.

பதினாறு வயது முடிவடைந்தன்று மார்க்கண்டேயர் சிவலிங்கப் பெருமானைக் கட்டித்தழுவியபடி இருந்தார். யமதர்மராஜன் மார்க்கண்டேயரின் உயிரைக் கவர பாசக் கயிற்றை வீசினான். அது மார்க்கண்டேயர் மீதும் சிவலிங்கத்தின் மீதும் விழுந்தது. மார்க்கண்டேயரின் பக்தியை மெச்சிய சிவபெருமான் யமதர்மராஜனைக் காலால் உதைத்தார்.

இதிலிருந்து விதியையும் கடவுளின் அனுக்கிரகத்தால் நீக்கலாம் என்று இந்து சமயங்கள் கூறுகின்றன.

கடவுளின் அனுக்கிரகம் இருந்தால் காலத்தையும் மாற்றலாம். இதை நாம் அபிராமிப்பட்டரது வாழ்க்கையைப் படிப்பதன் மூலம் அறிந்து கொள்ளலாம்.

பக்தர்களின் நல்வாழ்வுக்காக இந்துத் தெய்வங்கள் கிரகங்களிடம் சென்று அவர்களைக் கஷ்டப்படுத்தாதே என்று கூறியுள்ளன. பக்தர்களின் இன்பத்திற்காக இந்துத் தெய்வங்கள் அசுரர்களுடன் போர் புரிந்துள்ளன.

சுந்தரமூர்த்தி நாயனாரின் இன்பத்திற்காகச் சிவபெருமான் பரவையாரிடம் தூது சென்ற வரலாற்றை நாம் அறிவோம்.

தாய்ப்பன்றி இறந்தமையால் அவற்றின் துன்பத்தைப் போக்கச் சிவபெருமான் தாய்ப்பன்றி உருக்கொண்டு வந்து பாலூட்டியதையும் நாம் அறிவோம்.

தீவினை வருத்தும்; நல்வினை வாழ வைக்கும்.

அன்புமிக்கவன் உணவுதந்தால் அது உதவாத உணவானாலும் அமிர்தம் போன்றது என்கிறோம். அன்பில்லாதவன் அமிர்தத்தை தந்தாலும் அது உதவாது என்கிறோம்.

அன்பு கொள்வதில் மனிதனைப் போன்றவர்தான் இறைவனும். அன்போடு ஒரு பூவை வைத்தாலும் அது மலையளவு என்று எண்ணுவான் இறைவன். அன்பில்லாமல் 1008 சங்குகள் வைத்து அபிஷேகம் செய்தாலும் அதைப் பெரிதாக இறைவன் எடுக்கமாட்டார்.

இவற்றை உணர்பவர்கள் தான் கடவுளை உணர்ந்தவர்கள் ஆவார்கள். இவர்களால் தான் மற்றவர்களுக்கு உதவிசெய்ய முடியும்.

இத்தகைய நிலையைக் கடவுளின் மீது வைக்கும் நம்பிக்கை கொடுக்கிறது.

# வேஷம், வேற்றுமை, பாவம்

பிழைப்புக்காகப் போடும் போலி வேடங்கள் கூடப் போடுவோரைப் புனிதர்களாக்கியுள்ளன. அதை விடச் சமூகத்தால் வெறுத்து ஒதுக்கப்பட்ட பலர் பெரும் ஞானிகளாகவும் மாறியுள்ளனர்.

காட்டின் நடுவே ஒரு சுவாமியார் ஆச்சிரமம் அமைத்து தவம் செய்து வந்தார். அவரது சீடர்கள் பலர் சுவாமியாருடன் ஆச்சிரமத்தில் தங்கியிருந்து பணிவிடை செய்து வந்தனர். சுவாமியார் காலையும் மாலையும் பறவைகளுக்கும் மிருகங்களுக்கும் உணவு கொடுத்து வந்தார். அதனால் காட்டு மிருகங்களும் பறவைகளும் சுவாமியாரின் ஆச்சிரமத்தில் எந்நேரமும் கூடியிருந்தன. அத்துடன் அவை பயமின்றி சுவாமியாருடன் விளையாடின. மான்குட்டியொன்று சுவாமியாரின் மடியில் எந்நேரமும் படுத்துத் தூங்கியபடி இருக்கும். இதைக்கண்ட வேடன் ஒருவன் ஆச்சரியப்பட்டான். தன்னைக் கண்டதும் மிரண்டு ஓடும் மிருகங்கள் யாவும் சுவாமியாருடன் கொஞ்சி விளையாடுவதைக் கண்ட வேடன் தானும் சுவாமியார் போல வேடமணிந்து வந்திருந்தால் கஷ்டப்படாது மிருகங்களைப் பிடித்துண்ணலாம்; அத்துடன் வியாபாரமும் செய்யலாமெனத் தீர்மானித்தான்.

மறுநாள் அவன் சுவாமியாரைப் போல வேடமணிந்து காட்டின் நடுப்பகுதியில் வந்து அமர்ந்தான். சில மிருகங்களும் பறவைகளும் அவனுக்கருகில் வந்து நின்றன. அவன் தானியங்களைத் தூவினான். அவை தானியங்களைப் பார்த்து விட்டு முனிவரிடம் சென்று விட்டன.

நாலைந்து தினங்கள் கழிந்த பின்பு பறவைகள் தானியங்களைப் பயத்துடன் கொத்தின. மிருகங்கள் அஞ்சியபடி உணவுக்கருகில் செல்வதும் திரும்புவதுமாக இருந்தன.

சில தினங்களில் பறவைகளும், மிருகங்களும் அவனுடன் சேர்ந்து விட்டன. புறாக்கள் அவனது தோளில் இருந்தன. மான்கள் அவனை உரசின. ஒரு மானைப் பிடித்தான். அது அவனைக் கருணையுடன் பார்த்தது. அந்தப் பார்வை அவனது இரும்பு உள்ளத்தைக் கரைத்துவிட்டது. அதை அணைத்து முத்தமிட்டான். அன்புள்ளம் கொண்ட அதைக் கொல்ல வேண்டும் என்று நினைக்கக் கூட அவனால் முடியவில்லை. இரவானதும் வீட்டுக்குச் சென்றான். அவனுடன் மிருகங்களும் சென்றன. அதன் பின் அவன் காட்டுக்குத் தவம் செய்யச் செல்லவில்லை. மிருகங்கள் காட்டுக்குச் சென்று மேய்ந்து விட்டு அவனது வீட்டுக்கு வந்தன.

நெற்றியில் திருநீறு தரித்தாலே பக்தி வந்துவிடும். வேடன் திருநீறு தரித்து, உருத்திராட்ச மாலை அணிந்து, காவியுடுத்திச் சில நாட்கள் வாழ்ந்தமையால் அவனது மனதுள் இருந்த கொலை வெறி மாறிவிட்டது. அன்பும் இரக்கமும் அந்த இடத்தை நிரப்பிவிட்டன. தீய குணங்களை மாற்றும் சக்தி இந்து அணிகலன்களுக்கு உண்டு என்பதால் தான் இந்து ஒருவன் தினமும் மூன்று முறை நீறு அணிய வேண்டும் என்று இந்து மதங்கள் கூறுகின்றன.

இது போலப் பாரதத்தில் ஒரு கதை உண்டு. சீதையைக் கவர்ந்து வந்த இராவணன் தன்னைத் திருமணம் செய்யும் படி அவளை வற்புறுத்தினான். அவள் சம்மதிக்க வில்லை. அதனால் அவன் பலவேடங்கள் தரித்து அவளை

மயக்கப் பார்த்தான். முடியவில்லை. அதனால் தனக்கு தெரிந்த பலரிடம் சீதையை அடையும் வழியைக் கேட்டான்.

ஒருவன் சொன்னான்; "மஹாராஜாவே, நீங்கள் மாயசக்திகளால் நினைத்த வேடங்களை நினைத்தவுடன் எடுப்பீர்கள். அதைப்பயன்படுத்தி இராமனின் வேடமணிந்து செல்லுங்கள்." என்றான்.

இராவணன் சோகமாகச் சிரித்தான் பின்; "நான் ஏற்கனவே இராமனாக மாறி அவளிடம் சென்றேன். இராமனின் வேடம் பூண்டதும் எனது மனதில் உள்ள தீயகுணங்கள் யாவும் நல்ல குணங்களாக மாறி விட்டன. அதனால் என்னால் அவளை நினைக்கக் கூட முடியவில்லை." என்றான்.

ஒரு சில நிமிடங்கள் இராமவேடம் போட்ட இராவணனுக்கே இந்தக் கதியானால், பல நாட்கள் காவி உடை தரித்த வேடனின் மனம் மாறியது ஆச்சரியமல்ல. இதைவிட வேடிக்கையான சம்பவங்கள் பலவும் நடப்பதுண்டு.

எனது நண்பன் ஒருவனின் மகன் அயல்வீட்டுப் பெண்ணை விரும்பினான். அவள் சுத்த சைவம். சைவ அனுட்டானங்களைக் கடுமையாகப் பேணுபவள். முறைப்படி குருவிடம் தீட்சை பெற்றவள்.

திருநீற்றைப் பட்டுப்பையில் வைத்திருந்து தினமும் மூன்று முறை 'சிவ சிவ' என்று சொல்லி வலக்கையின் நடுவிரல் மூன்றினாலும் தரிப்பவள். அவளது நெற்றியில் உள்ள வீபூதிக்குறி வளையாமலும், ஒன்றை ஒன்று முட்டாமலும் மிக அகலாமலும், இடைவெளி ஒரு அங்குல அளவானதாகவும் இருக்கும்.

ஆனால் அவனது நெற்றியில் வீபூதி இராது. சைவ அனுட்டானங்கள் எதையும் அவன் செய்வதில்லை.

அவனைக் கண்டால் அவள் காறி உமிழ்வாள். அவனது நன்பன் ஒருவன்; "அவளைப்போல நீயும் நடந்து கொண்டால் அவள் உன்னை விரும்புவாள்" என்று சொன்னான்.

அவளின் மீதிருந்த மோகத்தால் அவன் ஒரு விநாயக சதுர்த்தி நாளன்று தலை முடியை வழித்துவிட்டுக் கோயிலுக்கு வந்து குருக்களிடம் தீட்சை பெற்றான். அதன் பின் அவன் உண்மையான பக்தனானான்.

நாளடைவில் அவளது மனம் இரங்கிக் காதலாகியது. இப்பொழுது இருவரும் மகிழ்வுடன் குடும்பம் நடத்துகின்றனர்.

அறியாமல், மகிமையைத் தெரிந்து கொள்ளாமல் சைவ அனுட்டானங்களைக் கைக்கொண்டாலும் அதற்குரிய பயன்கிடைக்கும்.

வேடன் ஒருவன் சிவராத்திரியன்று நடுக்காட்டில் பயமிகுதியால் மரத்தின் மீது ஏறிக் கண் விழித்திருந்தான்.

அவனுக்குச் சிவராத்திரியன்று கண் விழித்த பலன் கிடைத்தது.

ஒரு பெண் கணவனையும், பெற்றோரையும் கொலை செய்தவள். அவள் ஒரு நாள் நோயுற்று உணவில்லாமல் அலைந்து திரிந்து கொண்டிருந்தாள்.

அன்று சங்ஹடகர சதுர்த்தி. அவள் பசியின் கொடுமையால் ஒரு பிராமண வீட்டின் வாசலில் வந்தமர்ந்தாள். பிராமணன் விநாயகருக்கு உணவு படைத்துவிட்டு ஏகாட்ஷர மந்திரத்தை உச்சரித்தான். அதை அந்தச் சண்டாளப் பெண்ணும் உச்சரித்தாள். பின் பிராமணன் விரதத்திற்கு உண்ட

உணவின் மிகுதியை வெளியே கொண்டு வந்து போட்டு விட்டு ‘கணபதி, கணபதி’ என்று கூறினான். அந்த சண்டாளப் பெண்ணும் ‘கணபதி, கணபதி’ எனக் கூறிக்கொண்டு அவ்உணவை எடுத்து உண்டாள். அன்றிரவு அவள் நோய் அதிகரித்து இறந்துவிட்டாள். அவளை விநாயகரின் பூதகணங்கள் அழைத்துச் சென்றன.

இன்னொரு சண்டாளப்பெண் ஒரு செட்டியாரின் பசுக்களைப் பராமரித்து வந்தாள். ஒரு நாள் அவள் பசுக்களுக்குப் புல் பெற வயலுக்கு சென்றாள். அங்கிருந்த அறுகம் புற்களை வெட்டிப் பெரியதொரு கட்டாகக் கட்டினாள். அப்பொழுது பெரு மழை பெய்தது. வயலின் அருகே இருந்த விநாயகர் ஆலயத்துள் அறுகம்புற்கட்டை கொண்டு சென்று வைத்து விட்டு அவள் அக் கோயில் மண்டபத்தில் மழைக்காக ஒதுங்கினாள்.

மழைக்காக அக் கோயில் மண்டபத்துள் ஒரு கழுதையும் எருதும் ஒதுங்கின. அவை மண்டபத்தின் இருந்த அறுகம் புற்களைஇழுத்து இழுத்து உண்டன. அவை உண்ணும் போது அறுகம் புற்கள் விநாயகரின் மேல் உதிர்ந்தன.

அன்று சங்கடகர சதுர்த்தித் தினம். அறுகம்புல்லால் விநாயகரை அர்ச்சித்தால் மோட்சம் கிடைக்கும்.

புல்லை எருதும், கழுதையும் உண்பதைக் கண்ட சண்டாளப் பெண் ஒரு கோலை எடுத்து அவற்றைத் துரத்தினாள். அவை ஓடும்போது கழுதை எருதை முட்டி மோதிவிட்டு அப்பாற் சென்றது. அதனால் கோபம் கொண்ட எருது கழுதையை முட்ட அது பெரும் சண்டையாக மாறியது.

கோயிலுக்கு வந்த பூசகர் எருதையும், கழுதையையும் சண்டாளப் பெண்ணையும் வெளியே துரத்திவிட்டு கதவைப்பூட்டினார். விடியும் வரை மழையில் நனைந்த அந்தச் சண்டாளப்பெண் இறந்து விட்டாள். அந்தப் பெண் வெட்டி வைத்த அறுகம் புற்களை கழுதையும் எருதும் தின்னும் போது விநாயகர் மீது விழுந்ததால் அவளுக்கு அறுகம்புல்லால் விநாயகரை அர்ச்சித்த பலன் கிடைத்தது. அவள் இறந்ததும் அவளைப் பூதகணங்கள் விநாயகரிடம் அழைத்துச் சென்றன.

தெரிந்தோ, தெரியாமலோ தற்செயலாகவோ எவரொருவர் இந்து தர்ம அனுட்டானங்களைச் செய்தாலும் அதன் பயன் உடனே கிடைக்கும்.

கொலை, களவு, சூதாடல், கள்ளருந்தல், கற்பழித்தல் முதலிய பஞ்சமா பாதகங்களைச் செய்த பலர் திருந்தி நல்வாழ்வு பெற்றுப் போற்றத்தகுந்தவர்களாக வாழ்ந்திருக் - கிறார்கள்.

தெரியாமல் செய்வது தவறில்லை. அது மன்னிக்கப்படும்.

தெரிந்து செய்வது தவறு. அது மன்னிக்கப்படாதது என்று தான் பலரும் நினைக்கிறார்கள். அப்படியல்ல. செய்தவற்றை நினைத்து மனம் வருந்தி, அதற்குப் பிராயச் சித்தம் தேடினால் அத்தவறு மன்னிக்கப்படுமென இந்து தர்மம் கூறுகிறது.

விந்திய மலைக்கு அருகில் கொல்லம் என்றொரு நகரம் இருந்தது. அங்கு சித்ரூபன் என்றொரு வணிகன் வாழ்ந்து வந்தான். அவனது மகன் காமாந்தன்.

காமாந்தனின் பெற்றோர் இறந்ததும் காமாந்தன் கட்டுப்பாடுகளின்றி வாழ்ந்தமையால் அவனது செல்வம் கரைந்தது. அதனால் காமாந்தன் கொள்ளைகளில் ஈடுபட்டான்.

வழிப்பறிகள் செய்தான். அதனால் அந்நாட்டரசன் காமாந்தனை நாடு கடத்தினான். காமாந்தன் காட்டில் மறைந்திருந்து கொள்ளைகளில் ஈடுபட்டான். ஒரு நாள் காட்டுவழியே வந்த கணவர்த்தனன் என்ற பிராமணனைக் கொன்று, அவன் கொண்டு வந்த ஏராளமான பொருட்களைக் கொள்ளையிட்டான். சில நாட்களின் பின் காமந்தனைப் பிரமகத்தி தோஷம் பற்றிக் கொண்டது. நோயின் உபாதையால் காமாந்தன் துடிதுடித்தான்.

ஒரு நாள் ஓர் ஏழை பிராமணன் காட்டுவழியே செல்லும்போது காமந்தனின் இருப்பிடத்திற்கு வந்தான். அவனை வரவேற்று உபசரித்த காமாந்தன் அவனுக்கு ஏராளமான பொருட்களைக் கொடுத்தான். பின்; ''பிராமணர்களை அழைத்து வந்தால் பொருட்களை கொடுப்பேன்.'' என்றான்.

மறு நாள் அந்த ஏழைப் பிராமணன் ஏராளமான பிராமணர்களை அழைத்து வந்தான். அவர்களில் ஒருவன் காமந்தனை அடையாளம் கண்டு கொண்டான்; ''சண்டாளா, கொள்ளையடித்த பொருட்களை நீ தானம் கொடுக்கப் போகிறாயா? நீ தருவதை ஏற்றால் அந்தப் பாவம் எம்மைச் சேர்ந்து விடும்'' என்று கூறிவிட்டுப்புறப்பட்டான். வந்த பிராமணர் அனைவரும் பொருள் பெறாது புறப்பட்டனர்.

அவன் கவலைப்பட்டு; ''பெரியவர்களே, நான் செய்த பாவத்திற்கு பரிகாரமில்லையா?'' என்று இரந்தான்.

அதற்கு அவர்கள்; ''இக் காட்டில் ஒரு விநாயகர் ஆலயம் பாழடைந்திருக்கிறது. அதைப் புணருத்தாரணம் செய்து கும்பாபிஷேகம் செய். நீ செய்த பாவங்கள் யாவும் தீரும்'' என்றனர்.

காமந்தன் அந்த விநாயகர் ஆலயத்தைப் புணருத்தாரணம் செய்து கும்பாபிஷேகம் செய்தான். அதன் பின் பிராமணர்களும் மக்களும் அந்த விநாயகர் ஆலயத்திற்கு வந்து சென்றனர். பூசைகள், அபிஷேகங்கள் தினமும் நடைபெற்றன. காமந்தன் இறக்கும் வரைக்கும் அக்கோயிலில் தங்கியிருந்து சேவைகள் செய்தான்.

காமந்தன் இறந்ததும் யமதூதுவர்கள் அவனை யமதர்மராஜாவின் முன் கொண்டு சென்று விட்டனர்.

சித்திரகுப்தன் அவன் செய்த பாவ புண்ணியங்களை ஒவ்வொன்றாக சொன்னார்.

அதைக்கேட்ட யமதர்மராஜன்; ‘‘காமந்தா, நீ பல பாவங்களைச் செய்துள்ளாய். இருப்பினும் பாழடைந்த விநாயகர் ஆலயத்தைப் புணருத்தாரணம் செய்து கும்பாபிஷேகம் செய்து மக்களின் வழிபாட்டுக்குத் திறந்து விட்டமையால் உனது தீ வினைகள் மறைந்து விட்டன. எனினும் நீ செய்த பாவங்களுக்கான பயன்களை அனுபவிக்க வேண்டும். அதை உனது விருப்பப்படி அநுபவிக்கலாம்’’ என்றான்.

காமந்தன் தான் செய்த புண்ணிய பயன்களையே முதலில் அநுபவிக்க விரும்பினான்.

அதன்படி காமந்தன் சௌரஷ்டிர தேசத்தின் அரசனுக்கு ‘சோமகாந்தன்’ என்ற மகனாக அவதரித்தான்.

இக் கதையை விநாயக புராணம் கூறுகிறது. ‘விநாயகரை முழு மனதோடு வணங்குபவர்களுக்கு முன் செய்த பாவங்கள் யாவும் தீரும். பின் பாவங்களை செய்ய மனமிராது’ என்றும் விநாயபுராணம் கூறுகின்றது.

கொங்கு நாட்டிலே எறிபக்த நாயனார் என்று ஒரு சிவபக்தர் வாழ்ந்து வந்தர். அவர் சிவனடியார்களைச் சிவனாக எண்ணி வழிபடுபவர். சிவனடியார்களுக்கு யாராவது தீங்குகள் செய்தால் அவர்களைத் தண்டிப்பார். சிலரை மழுவினால் வெட்டிக் கொன்றும் விடுவார்.

ஒரு நாள் சிவகாமி ஆண்டார் என்றொரு சிவனடியார் ஆனிலை என்ற ஆலயத்தில் வீற்றிருக்கும் சிவபெருமானுக்குச் சூட மாலை கட்டிக்கொண்டு கோயிலுக்கு சென்றார். செல்லும் வழியில் அவ்வூர் அரசனது பட்டத்து யானை மதங்கொண்டு வீதிவழியால் வந்த சிவகாமி ஆண்டாரின் கூடையைப் பறித்து அதனுள் இருந்த மாலையைச் சிதைத்தது. பின் சிவகாமி ஆண்டாரையும் தாக்கியது.

அதைக் கண்டு சினமுற்ற எறிபக்த நாயனார் ஆவேஷசத்துடன் தனது மழுவை எடுத்துப் பட்டத்து யானையின் தும்பிக்கையை வெட்டியதோடு, அதனுடன் வந்த பாகர்கள் ஐவரையும் கொன்றார்.

அதை அறிந்த அரசன் சேனையுடன் அவ்விடத்திற்கு வந்தான். எறிபக்த நாயனார் நின்ற நிலையைக் கண்டு பயந்த அரசன், படை வீரரைத் தூரச்செல்லும் படி கூறிவிட்டு நாயனாரின் அருகே வந்து அவரைப் பணிந்தான்.

“சுவாமி, காரணமின்றித் தாங்கள் பட்டத்துயானையின் தும்பிக்கையை அறுத்திருக்கமாட்டீர்கள். அத்துடன் அதன் பாகர்கள் ஐவரையும் கொன்றிருக்க மாட்டீர்கள். அவர்கள் செய்த தவறை நானறியேன்” என்றான்.

எறிபக்த நாயனார் நடந்த சம்பவத்தைக் கூறினார்.

“சிவனடியாரை மதியாமல் துன்பம் செய்த யானையைக் கொன்றதும், அதை வழிநடத்தத் தவறிய பாகன்களைக் கொண்றதும். நியாயமானது. அதைவிட அத்தவறுகளைச் செய்யக் காரணமாக இருந்த என்னையும் கொல்ல வேண்டும்” என்ற அரசன் தலை குனிந்து நின்றான்.

அதைக்கண்டு; “சிவனடியார்கள் மீது பற்றும் பாசமும் பெருமதிப்பும் வைத்திருக்கும் அரசனை நான் தவறாக நினைத்துவிட்டேன்.” என மனம் வருந்திய எறிபக்த நாயனார் தனது கையில் இருந்த மழுவால் தனது கழுத்தை அறுத்தார்.

சிவனடியார்களுக்குத் துன்பம் ஏற்பட்டால் அது சிவனுக்கிழைத்த துன்பம் எனக் கருதி நாயன்மார்களும் அரசர்களும் அன்று வாழ்ந்தனர்.

தொண்டை நாட்டிலே திருவேற்காடு என்னும் ஊரில் சிவனடியார் ஒருவர் வாழ்ந்து வந்தார். அவர் சிவனடியார்களுக்கு உணவளித்த பின்பு எஞ்சியவற்றைத் தான் உண்டு வந்தார். சிவனடியார்களுக்குத் தினமும் உணவிட்டு வந்தமையால் அவரிடமிருந்த பொருட்கள் யாவும் முடிந்து விட்டன. அதனால் தனது நிலபுலங்களை விற்றுச் சிவனடியார்களுக்கு உணவிட்டு வந்தார். நில புலங்கள் விற்ற பணமும் முடிந்தமையால் அவர் சூதாடி அதன் மூலம் வரும்பணத்தைக் கொண்டு சிவனடியார்களுக்கு உணவு கொடுத்தார்.

சூதாட மறுப்பவர்களை உடைவாளை உருவி குத்தியும், வெட்டியும், வெருட்டியும் சூதாட வைப்பார். இதனால் அவரை “மூர்க்கர்” என மக்கள் அழைத்தனர். இவர் தனது வாழ்நாள் முழுவதும் சூதாடி அதன் மூலம் கிடைக்கும் பொருட்களைக் கொண்டு சிவனடியார் களுக்கு உணவு படைத்து வந்தார்.

திருநீலகண்ட நாயனார் ஒரு நாள் விபச்சாரியிடம் சென்று இன்பம் அனுபவித்து விட்டார். அதைக் கேள்விப்பட்ட அவரது மனைவியார் திருநீலகண்ட நாயனார் தன்னைத் தீண்டக்கூடாதென்று திருநீலகண்டத்தை உடைய சிவன் மீது சத்தியம் செய்தார். அதனால் இருவரும் ஒரு வீட்டில் பிரிந்து வாழ்ந்தனர்.

திருநீலகண்டர் சிவபெருமானிடத்தில் நிறைந்த அன்பு பூண்டவர். சிவனடியார்களுக்குத் திருவோடு வழங்குபவர். அத்துடன் சிவபெருமானின் திருநீலகண்டத்தைப் புகழ்ந்து அடியார்களுக்கு உரைப்பவர். அதனால் மகிழ்ந்த சிவபெருமான் இருவரையும் ஒற்றுமையாக்க விரும்பினார்.

ஒரு நாள் சிவபெருமான் கிழப்பிராமண வடிவம் கொண்டு திருநீலகண்ட நாயனாரின் இருப்பிடத்திற்கு வந்து, ஒரு திருவோட்டைக் கொடுத்து, அதைப் பாதுகாத்து வைக்கும்படியும் சில நாள்ப் பொறுத்து வந்து பெற்றுக் கொள்வதாகவும் கூறிச்சென்றார்.

சில நாள்கள் கழித்துக் கிழப்பிராமணர் திருநீலகண்ட நாயனாரின் வீட்டுக்குச் சென்று தான் கொடுத்த திருவோட்டைத் தருமாறு கேட்டார்.

திருநீல கண்ட நாயனார், தான் திருவோட்டை வைத்த இடத்தில் சென்று பார்த்தார். அதைக்காணவில்லை. அதனால் மனம் வருந்திய திருநீலகண்டர் அத் திருவோட்டிற்குப் பதிலாகப் பொன்னும் மணியும் தருவதாகக் கூறினார்.

அதற்கு அக்கிழப் பிராமணர் மறுத்து; “நீ பெறுமதி மிக்க எனது திருவோட்டை மறைத்து வைத்துக் கொண்டு பொய் பேசுகிறாய். நீ உண்மையானவனானால் உனது

மனைவியின் கையைப் பிடித்துச் சிவன் கோயில் குளத்தில் மூழ்கிச் சத்தியம் செய்'' என்று சொன்னார்.

திருநீலகண்டர் தமக்கும் மனைவிக்கும் உள்ள பிரச்சினையைக் கூறி, தான் மட்டும் குளத்தில் மூழ்கிச் சத்தியம் செய்வதாகக் கூறினார்.

அதை மறுத்த கிழப்பிராமணர் ஒரு கம்பை எடுத்துக் கொடுத்து; ''ஒரு நுனியை நீ பிடி, மறு நுனியை உனது மனைவி பிடிக்கட்டும். இருவரும் குளத்தில் மூழ்கிச் சத்தியம் செய்து தாருங்கள்'' என்றார்.

அதன்படி இருவரும் குளத்தில் மூழ்கி எழுந்தனர். அப்பொழுது சிவபெருமானும் உமாதேவியாரும் இடபவாகனத்தில் காட்சி கொடுத்து இருவரையும் ஒற்றுமைப் படுத்தினர்.

இதை விட அருணகிரி நாதருடைய வாழ்க்கை வரலாறு அனைவருக்கும் தெரியும். இந்துத் தெய்வங்கள் குற்றம் செய்வோரை மன்னிப்பது மட்டுமல்லாமல் அவர்களின் நல்வாழ்விற்கும் துணை நின்ற வரலாற்றை நாம் இதிகாச புராணங்களினூடாக அறிந்து கொள்ளலாம்.

பாண்டவர்கள் ஐவரையும் திரௌபதி திருமணம் செய்து வாழ்ந்தவள். எனினும் அவள் கற்புக்கரசி என்று போற்றப்படுகிறாள்.

பகவத்கீதையில் மஹாவிஷ்ணு பற்றுக்களால் கலங்கி அவதிப்படும் அர்ச்சுனனைப் பார்த்து இவ்வாறு கூறுகிறார்.

''குந்தியின் புதல்வனே, நீ எதைப் புசித்தாலும், எதைத் ஹோமம் பண்ணினாலும், எதை ஐயமிட்டாலும், எத் தானத்தைச் செய்தாலும் அதை எனக்கு அர்ப்பணம் செய். அதனால்

உனக்குப் பாவமில்லை. நன்மை தீமைகளைப் பயக்கின்ற வினைகளிலிருந்து நீ விடுபடுவாய்''

தான் செய்பவற்றை இறைவனுக்கு அர்ப்பணிப்பவன் தீய செயல்களைச் செய்யமாட்டான். நாம் இறைவனுக்குப் பொங்கிப் படைக்கும் வேளைகளில் குளித்து, விரதமிருந்து, பயபக்தியுடன் மிகவும் சுத்தமாகவே பொங்கிப் படைக்கின்றோம்.

இறைவனுக்குச் செயலை அர்ப்பணிப்பவன் தீயவற்றை அர்ப்பணிக்கமாட்டான். அதனால் தான் பகவான் அப்படிக் கூறினார்.

எச் செயல்களைச் செய்தாலும் மனம் சுத்தமாக இருத்தல் வேண்டும். செயலை செய்யும் போது ஈஸ்வர சிந்தனை இருக்க வேண்டுமே தவிர வேறு சிந்தனைகள் இருக்கக் கூடாது.

கௌசிக முனிவர் ஒரு குடும்பப் பெண்ணிடம் இரக்கச் சென்றார். அவர் அவளை அழைக்கும் போது அவள் நோயுற்றிருந்த தன் கணவனுக்குப் பணிவிடை செய்து கொண்டிருந்தாள். தனது பணிவிடையை முடித்துக் கொண்டு அவள் வெளியே வந்த போது முனிவர் அவளை மிகுந்த சினத்துடன் பார்த்தார். முனிவரது கோபத்தைக் கண்ட அப் பத்தினிப்பெண்; ''முனிவரே என்னைக் கொக்கென்று நினைத்தீரா?'' என்று கேட்டாள்.

சிறிதுநேரத்திற்கு முன்பாக மரநிழலில் அவர் படுத்திருந்த போது மரத்தில் இருந்த கொக்கு ஒன்று அவர் மீது எச்சமிட்டுவிட்டது. அதனால் கோபங் கொண்ட அவர் தன் தவவலிமையைத் திரட்டி அக்கொக்கைச் சினத்துடன் பார்த்தார். உடனே அக் கொக்கு எரிந்து சாம்பராகிவிட்டது.

“சிறிது நேரத்திற்கு முன் நடந்த அந்தச் சம்பவம் அப் பெண்ணுக்கு எப்படித் தெரிந்தது?” என்று யோசித்தார் முனிவர்

“தமது கடமையை ஈஸ்வர சிந்தையுடன் செய்பவர்கள் முக்காலத்தையும் உணர்ந்து கொள்வார்கள்” என்று உணர்ந்த முனிவர் தான் ஞானம் பெறும் வழியைக் கூறுமாறு கேட்டார்.

அவள் ஒருவரின் பெயரையும் முகவரியையும் கொடுத்தாள்.

அங்கு சென்று அவரைச் சந்தித்த போது முனிவர் அதிர்ந்து போனார்.

அவள் அவருக்கு ஞான உபதேசம் செய்ய ஏற்பாடு செய்திருந்த குரு ஒரு கசாப்புக் கடைக்காரன். முனிவர் முறைப்படி அவனைக் குருவாக ஏற்று ஞான உபதேசம் பெற்றார்.

இப்படி இந்து தர்மம் ஒருவனைத் தண்டிக்காது அவனைத் திருந்திச் சமூகப் பண்புடையவனாக்குவதை இலச்சியமாகக் கொண்டுள்ளது.

ஆராய்ந்து பார்த்தால் குற்றச் செயல்கள் செய்யாதவர்கள் யாரும் இல்லை. தீயவர்கள் என்று ஒவ்வொருவரையும் விலக்கினால் படைக்கப்பட்ட ஆன்மாக்கள் எதையும் நல்லதாக எடுக்க முடியாது. அதனால் தான் இந்து சமயங்கள் கொடிய பாவங்களைச் செய்தவனையும் திருத்த முயல்கிறது.

“யாருடைய அக்ஞானம் ஆத்ம ஞானத்தால் அழிக்கப்படுகிறதோ, அவர்களுக்கு அந்த ஞானம் சூரியனைப் போன்றதாய்ப் பரம்பொருளை விளக்குகிறது” என்கிறது பகவத்கீதை

சூரியன் உதிக்கும் போது இருள் தானே அகன்றுவிடுகிறது. அது போல மனதில் ஞானம் உதித்தால் பாவம் அழிந்து போகும்.

“எந்தக் குற்றம் செய்தவனானாலும் சிரத்தையுடன் சித்தத்தை என்பால் வைத்து, என்னைப்பூசித்தால் அவன் யோகிகள் எல்லோருக்கும் மேலானவன்” என்றும்,

“மரணகாலத்திலும் என்னையே நினைத்துக் கொண்டு உடலைத் துறந்து யார் போகிறானோ அவன் என் சொரூபத்தை அடைகிறான். இதில் ஐயமில்லை.” என்றும்,

“வேறு எண்ணங்களின்றி யார் என்னைக் நெடிது இடையறாது பூசிக்கின்றானோ அந்த ஒரு நிலைப்பட்டவனுக்கு நான் எளிதில் அகப்படுவேன்” என்றும்,

“யார் எனக்குப் பற்றுக்களற்று இலை, மலர், கனி அல்லது நீரைப் பக்தியோடு படைக்கின்றானோ, அத்தூய மனத்தை உடையவனது அன்பளிப்பை நான் மகிழ்வுடன் ஏற்பேன்.” என்றும்,

“மனதை என்னிடத்தில் வைத்து, என்பால் பக்தி பூண்டு, எனக்கு யாகம் செய்து, என்னை வணங்கு, என்னைக் குறியாகக் கொண்டு உள்ளத்தை உறுதிப்படுத்து, என்னையே அடைவாய்” என்றும்,

“என்னிடத்தே மனதை வைத்து என்னிடத்தில் புத்தியைச் செலுத்துக. பின்பு என்னிடத்திலே வசிப்பாய்” என்றும்

“ஒழுக்கம் இல்லாதவனுக்கும், பக்தி இல்லாதவனுக்கும், தொண்டு புரியாதவனுக்கும், கடவுளை இகழ்பவனுக்கும்

கடவுளின் கோட்பாட்டைக் கூறக் கூடாது'' என்றும் பகவத்கீதையில் மஹாவிஷ்ணு கூறுகிறார்.

இவற்றை விளக்க மகான் இராமகிருஷ்ண பரமஹம்சர் அருமையான ஒரு கதையைக் கூறுகிறார்.

ஒரு சன்னியாசி ஒரு கோயிலுக்கு அருகே வசித்து வந்தார். அவருடைய இருப்பிடத்திற்கு முன்னால் ஒரு தாசியின் வீடு இருந்தது. அவள் மிகுந்த அழகியாக இருந்தமையால் அவளது வீட்டில் எவ்வேளையிலும் பல ஆடவர்கள் கூடியிருந்தனர்.

ஒரு நாள் சன்னியாசி அவளை அழைத்து அவளுக்குப் புத்திமதிகள் பலவும் கூறினார்.

தான் தவறு செய்கிறேன் என்பதை நினைத்து அவள் மனம் வருந்தினாள். இருப்பினும் அவளது குலத்தொழிலை அவளால் விட முடியவில்லை. அவளது மனம் மாறினாலும் ஆடவர்கள் பலர் வந்து ஆசைகாட்டிப் பணத்தைக் கொடுத்துத் தம் எண்ணத்தைப் பூர்த்தி செய்து வந்தனர்.

சன்னியாசி புத்திமதி கூறிய பின் அவள் தான் தவறு செய்கிறேன் என்று உணர்ந்து தினமும் ஈஸ்வரனை உள்ளன்போடு வணங்கி; "நான் வயிற்றுப் பிழைப்புக்காக இத் தொழிலைச் செய்கிறேன் இதை மன்னித்தருளல் வேண்டும்'' என்று இரப்பாள்.

தான் சொன்ன பின்பும் அத்தாசி விபச்சாரம் செய்து வந்தமையைக் கண்ட சன்னியாசி தனது தவத்தை விட்டுவிட்டு அவளின் வீட்டுக்கு வருபவர்களைக் கணக்கிடத் தொடங்கினார். அதற்காக அவர் ஒவ்வொருவரும் வரும்போது ஒவ்வொரு கல்லை எடுத்துப் போட்டு எண்ணிக் கொள்வார்.

கற்கள் பெருங்குவியலாயின. ஒரு நாள் சன்னியாசி அப்பெண்ணை அழைத்து அக் கற்குவியலைக் காட்டி; “பார்த்தாயா நீ செய்த பாவத்தை. இனியாவது நீ திருந்தப்பார்” என்றார்.

பெருங்கற்குவியலைக் கண்ட அப் பெண் பயந்து நடுங்கி இறைவனைத் தொழுதாள்; “இறைவா, இத்தொழில் எனது குலத்தொழில். இதை நான் விரும்பிச் செய்யவில்லை. இத்தொழிலைச் செய்யாமல் என்னால் வாழ முடியாது. அதனால் எனது உயிரை கொண்டு செல்” என்று அழுதாள்; பிரார்த்தித்தாள். அவளது பிரார்த்தனை பயனளித்தது. அன்று இரவு அவள் மரணமடைந்து விட்டாள். அன்று அந்த சன்னியாசியும் இறந்துபோனார்.

வைகுண்டத்தில் இருந்து விஷ்ணுதூதர்கள் வந்து அத்தாசியின் உயிரைச் சுவர்க்கத்திற்குக் கொண்டு போனார்கள். எமதூதுவர்கள் வந்து சந்நியாசியின் உயிரை எமஉலகிற்கு கொண்டு போனார்கள்.

அதைக் கண்ட சந்நியாசி; “இது தானா ஈஸ்வரனின் நீதி. வாழ் நாள் முழுதும் தவம் செய்த என்னை நரகத்திற்கும், தினந்தோறும் பாவம் செய்த தாசியை சொர்க்கத்திற்கும் கொண்டு சென்றது நியாயமா?” என விஷ்ணு தூதர்களைக் கேட்டார்.

விஷ்ணு தூதுவர்கள்; “ஈஸ்வரனுடைய ஆக்ஞை எப்பொழுதும் நியாயமானதாகவே இருக்கும். நீ எதை நினைக்கிறாயோ அதையே அனுபவிப்பாய். கௌரவத்தையும் புகழையும் பெற வேண்டிய நீ பாடாடோபத்துடன் காலம் கழித்தாய். உனது மனம் ஒரு கணமென்றாலும் சுத்தத்துடன்

இறைவனை நினைக்கவில்லை. அந்தத் தாசி சரீரத்தால் பாவம் செய்தாளே தவிர இரவும் பகலும் மனமார, ஈஸ்வரனைத் துதித்து வந்தாள். பூலோகத்தில் உனது சரீரமும், அவளது சரீரமும் அடையும் மரியாதையைப் பார். நீ சரீரத்தால் பாவம் செய்யவில்லை. அதனால் உனது சரீரத்தைப் புஸ்பங்களால் அலங்கரித்து ஆற்றிலிடுவதற்காக மேள தாளங்களுடன் ஊர்வலமாகக் கொண்டு செல்கிறார்கள். பாவம் செய்த அத்தாசியின் உடலை நாயும் நரியும் பிடுங்கித் தின்கின்றன. அவள் சுத்தமனமுடையவளாக ஈஸ்வர சிந்தனையுடன் வாழ்ந்ததால் சுவர்க்கத்தில் இன்பவாழ்வு வாழச் செல்கிறாள். உனது மனம் ஈஸ்வரனை ஆராதிக்கும் போதும் அசுத்தமாக இருந்தமையால் அது நரகத்திற்குச் செல்கிறது. வாழும் பொழுது நீ தாசியாகவே வாழ்ந்தாய்'' என்று கூறினார்கள். இக் கதை உடல் வேறு மனம் வேறு என்று உணர்த்துகிறது.

உடல் செய்யும் தவறுகளை மனம் திருத்துதல் வேண்டும். இல்லாவிட்டால் அத்தவறுக்காக இறைவனிடம் மன்னிப்புக் கேட்க வேண்டும்.

பிரமுகர்கள் உடலால் உதவி செய்கிறார்கள்; மனதால் செய்த உதவிகளை மீளப்பெறுகிறார்கள்.

எனக்கு தெரிந்த ஓர் உயர் அதிகாரி இருந்தார். அவர் தாராளமாக உதவி செய்பவர் என மக்கள் பேசிக்கொள்வார்கள். அவரது ஊழியர்களைச் சந்தித்த பின்புதான் அவரைச் சந்திக்க முடியும்.

ஊழியர்கள் காரியமாற்ற வருபவர்களிடம் பேரம் பேசி ஒரு தொகையை வசூலித்து விடுவார்கள்; ''ஐயா மிகவும்

நல்லவர், அவர் எதுவும் வாங்க மாட்டார். அவரைப் பார்க்க அனுமதிப்பதற்குதான் இது என்று சொல்வார்கள்”

காரியமாற்ற வந்தோர் கொடுத்த பணம் முழுவதையும் கொடுத்தால் தான் உயர் அதிகாரி கையொப்பமிடுவார். ஆனால் இது தெரியாத மக்கள் ஊழியர்களைக் கூடாதவர்கள் என்று ஏசுவார்கள்.

இது உடலாலும் மனதாலும் செய்யும் பாவம். உடலால் செய்யும் பாவங்களுக்கு இவ்வுலகில் தண்டனை கிடைக்கும். குணமாகாத நோய்கள், காயங்கள், தீராத கவலைகள், வறுமை போன்றன உடல் செய்த பாவங்களுக்கான தண்டனைகளாகும்.

சிறுவயதில் சர்க்கரை வியாதி உண்டாகுதல்

சிறு வயதில் புற்றுநோய் உண்டாகுதல்.

வறுமையால் உணவு கிடைக்காது போதல் என்பன உடல் பாவம் செய்ததால் உண்டாகும் தண்டனையாகும்.

உடலும் மனமும் சேர்ந்து செய்யும் பாவத்திற்கு மேற்கூறிய நோய்கள் உண்டாகும். பணம் கோடிக்கணக்கில் இருக்கும். விரும்பிய உணவை உண்ண நோய் விடாது. பிள்ளைகள் நன்றாகப் படித்திருப்பார்கள் ஆனால் விவேகத்துடன் செயலாற்ற மாட்டார்கள்; அங்கவீனமான பிள்ளைகள் பிறப்பார்கள்; அவர்கள் அளவுக்கதிகமாகக் குடிப்பார்கள்; சூதாடுவார்கள் இதனால் பெற்றோர், மனைவி மக்கள், இனத்தவர்கள் துன்பப்படுவார்கள்.

காவலூரில் ஒரு பெரியவர் இருந்தார். அவருக்குப் பிள்ளைகள் இல்லை. இருப்பினும் அவரது நடத்தையால் ஊரில் உள்ள அனைவரும் அவரது பிள்ளைகளானார்கள்.

அதே ஊரில் இன்னொருவர் இருந்தார். அவருக்கு எட்டுப்பிள்ளைகள். சொத்துக் காரணமாக சண்டையிட்டு நால்வர் சிறைச்சாலையில் இருக்கிறார்கள். இருவர் இறந்து விட்டனர். அவர் வயோதிபராகி விட்டார். எஞ்சிய இரு பிள்ளைகளும் சண்டையிட்டுக் கொண்டு சென்றுவிட்டனர். ஊரில் அவர் வாழும் காலத்தில் பலருடன் பிரச்சினைப்பட்டதால் ஊரவர்கள் எவரும் அவரது வீட்டுக்குச் செல்வதில்லை.

ஒரு நாள் அவர் இறந்துவிட்டார். அவருக்குக் கொள்ளிவைக்க இருமக்களும் முன்வரவில்லை. பலர் புத்திமதி கூறியும் அவர்கள் ஏற்றுக்கொள்ளவில்லை. அதனால் அந்தப் பெரியவரே கொள்ளி வைத்தார்.

பெரியவர் இறந்து விட்டார். அவருக்குக் கொள்ளி வைப்பது பெருமை என்று நினைத்து ஊரில் பலர் அவருக்கு கொள்ளி வைக்க முன்வந்தனர்.

வாழும் முறைதான் சொர்க்கத்தையும் நரகத்தையும் கொடுக்கிறது என்பதைப் புரிந்து கொள்பவன் மண்ணில் நல்ல வண்ணம் வாழ்வான். அப்படி வாழ்பவன் விண்ணிலும் நல்லபடி வாழ்வான் என்று இந்துதர்மம் கூறுகிறது.

மிகமிக அழகான ஒரு பெண்ணைக் கண்கள் கண்டு விடுகின்றன. அவளது அழகான நெற்றி, போதையூட்டும் இதழ்கள், கரும்பான கன்னங்கள், பருத்த மார்பகங்கள், துரும்பைப் போன்ற இடை, நீண்ட தலை முடி, அவையாவும் சேர்ந்து உடலில் உள்ள உணர்வுகளை முறுக்கேற்றுகின்றன. இந்திரியங்களும் அவற்றிலிருந்து உண்டாகும் உணர்வுகளும் விழித்துக் கனவுகள் கண்டு சுவைக்க ஆரம்பிக்கின்றன. இவ்வேளையில் அறிவுள்ளவனின் மனம் விழித்து வரப்போகும்

ஆபத்தை உணர்ததுதல் வேண்டும். “புத்தி எனப்படுவது நுண்ணறிவு அல்லது நீதியைப் போதிக்கவல்ல அந்தக்கரணம்” என்று பகவத்கீதை சொல்கிறது.

எனவே அவளது நெற்றியில் குங்குமம் இருக்கிறது. கழுத்தில் தாலி உள்ளது. அவள் பிறன் மனைவி என்று கூறுதல் வேண்டும்.

இல்லாவிட்டால்; “நீ திருமணமானவன். அதனால் இன்னொரு கன்னிப் பெண்ணை விரும்பக்கூடாது” என்று கூறுதல் வேண்டும்.

இப்படிக் கூறாவிட்டால் மனமும் உடலும் சேர்ந்து பாவம் செய்யும்.

141. பிறன்பொருளாள் பெட்டுஒழுகும் பேதைமை ஞாலத்து
அறம்பொருள் கண்டார்கண் இல்.

பிறனுக்கு உரியவளாகிய மனைவியை விரும்பி நடக்கும் அறியாமை அறம், பொருள் என்பவற்றை ஆராய்ந்து அறிந்தவரிடம் இல்லை.

146. பகைபாவம் அச்சம் பழியென நான்கும்
இகவாவாம் இல்இறப்பான் கண்.

பகை, பாவம், அச்சம், பழி என்னும் நான்கு தீமைகளும் பிறன் மனைவியோடு நெறிதவறி நடப்பவனை விட்டு என்றும் நீங்காது.

148. பிறன்மனை நோக்காத பேராண்மை சான்றோர்க்கு
அறனொன்றோ ஆன்ற ஒழுக்கு.

பிறனுடைய மனைவியை இச்சையுடன் நோக்காத ஆண்மை ஆன்றோர்க்கு அறம் மட்டும் அன்று; நிறைந்த ஒழுக்கமும் ஆகும்.

149. நலக்குஉரியார் யாரெனின் நாமநீர் வைப்பின்
பிறற்குஉரியாள் தோள்தோயா தார்.

கடல் சூழ்ந்த பெரிய உலகிலே எல்லோரும் விரும்புதற்குரிய நல்லவர் யார் என்றால் பிறனுக்கு உரிமையானவளின் தோள்களைத் தழுவாதவரே.

150. அறன்வரையான் அல்ல செயினும் பிறன்வரையாள்
பெண்மை நயவாமை நன்று

ஒருவன் அறத்தின் வழியில் வாழாமல் அறமில்லாத பல செயல்களைச் செய்தாலும், பிறனுக்கு உரியவளின் பெண்மையை விரும்பாமல் வாழ்தல் ஒன்றே நல்லது.

பிறன் மனைவி மீது இச்சைப்படுவதால் உண்டாகும் தீமைகளைப் பற்றி வள்ளுவர் மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

ஒருவருக்கு ஒருத்தி என்று இராமன் வாழ்ந்ததைப் போல வாழாவிட்டால், பிறன் மனைவி மீது ஆசைப்பட்டுத் தன் குலம் முழுவதினதும் அழிவுக்குக் காரணமான இராவணனின் நிலையே ஏற்படும்.

புத்தி, ஞானம், மயக்கமின்மை, பொறுமை, ஆத்திரம், அடக்கம், அமைதி, இன்பம், துன்பம், பிறப்பு, இறப்பு, அஞ்சுதல், அஞ்சாமை, அகிம்சை, மனநடுவு, திருப்தி, தானம், புகழ்ச்சி, இகழ்ச்சி ஆகிய பல்வேறு பண்புகளை இறைவன் உயிர்களுக்குப் படைத்துள்ளான்.

உடலும் மனமும் நெறி தவறும் போது ஆத்மா அதைக் கட்டுப்படுத்தல் வேண்டும்.

புத்தி என்பது நுண்ணறிவு அல்லது ஆழ்ந்த நீதிக்கருத்துக்களைச் சிந்தித்தல்.

ஞானம் என்பது ஆத்மாவை அறிந்து செயலாற்றுதல், பிறரின் துன்பத்தைக் கண்டு இரங்கல்.

மயக்கமின்மை என்பது எந்தவொரு கடினமான வேளைகளிலும் மனக்குழப்பமேற்படாது நீதியான முறையில் செயற்படல்.

பொறுமை என்பது பிறரால் மிக மோசமாகத் தாக்கப்படும் போதும் மனம் நோகாதிருத்தல்.

சத்தியம் என்பது வாய்மை அல்லது பார்த்தும் கேட்டும் அநுபவித்தும் அறிந்தவைகளை உள்ளபடி உரைப்பது.

அடக்கம் என்பது இந்திரியங்களாலான மெய், வாய், கண், மூக்கு, செவி ஆகியவற்றைத் தம்போக்கில் செல்லவிடாது அடக்குதல்.

அமைதி என்பது அந்தக் கரணங்களான மனம், புத்தி, அகங்காரம் ஆகியவற்றின் செயற்பாடுகளைக் கட்டுப்படுத்தி வைத்திருத்தல்.

இன்பம் என்பது தர்மங்களென வகுக்கப்பட்ட வற்றிலிருந்து வழுவாதிருந்து மகிழல்.

துக்கம் என்பது, தர்மங்களில் இருந்து வழுவுங்கால் உண்டாகும் விளைவுகள்.

அஞ்சுதல் என்பது தீயவற்றைச் செய்யப் பயம் கொள்ளல்,

அஞ்சாமை என்பது தீமைக்கு பயப்படுதல்.

அகிம்சை என்பது எந்த உயிருக்கும் கேடு செய்யாமை.

மனநடுவு என்பது எவ்வேளையிலும் சமநிலை இழக்காது இருத்தல்.

திருப்தி என்பது தனக்குக் கிடைத்தது போதும் என்று நினைக்கும் மனநிலை.

தபசு என்பது இத்திரியங்களின் போக்கிற்கேற்ப மனதைச் செல்ல விடாமல் அடக்குதல். இதை உடலை அடக்கி விடுதல் என்றும் சொல்லலாம்.

தானம் என்பது தனது பொருள் தனக்குதவுவதை விடப்பிறருக்க உதவுவதை விரும்பல்.

புகழ் என்பது தர்மகாரியங்களைப் பற்றின்றிச் செய்வதால் வரும் மேம்பாடு.

இகழ்ச்சி என்பது தீய செயல்களால் ஏற்படும் கேவலம்.

இவை ஒவ்வொன்றிற்கும் வள்ளுவர் விளக்கம் கூறியுள்ளார்.

423. எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்பது அறிவு.

எப்பொருளை யார்யாரிடம் கேட்டாலும், அப்பொருளின் உண்மைத் தன்மையை அறிந்து கொள்வதே அறிவாகும்.

154. நிறையுடைமை நீங்காமை வேண்டின் பொறையுடைமை
போற்றி ஒழுகப் படும்.

ஒருவன் நிறையுடையவனாக எப்பொழுதும் இருக்க வேண்டுமென விரும்பினால், அவன் பொறுமையைப் போற்றி ஒழுகுதல் வேண்டும்.

291. வாய்மை எனப்படுவது யாதுஎனின் யாதுஒன்றும்
தீமை இலாத சொல்.

வாய்மை எனப்படுவது என்னவென்றால், மற்றவர்களுக்கு சிறிதளவேனும் துன்பத்தை உண்டாக்காத சொற்களைப் பேசுவது ஆகும்.

130. கதம்காத்துக் கற்றுஅடங்கல் ஆற்றுவான் செவ்வி
அறம்பார்க்கும் ஆற்றின் நுழைந்து.

சினத்தை அடக்கி, கற்க வேண்டியவற்றைக் கற்று அடக்கம் உடையவனாக வாழும் ஒருவனை, தரும தேவதை தேடிச்சென்று குறைநிறைகளைக் கேட்டு உதவி செய்வாள்.

6. பொறிவாயில் ஐந்தவித்தான் பொய்தீர் ஒழுக்க
   நெறிநின்றார் நீடுவாழ் வார்.

ஐம்பொறிகளால் உண்டாகும் ஆசைத் தீயினை அவித்த இறைவனின் பொய்யற்ற ஒழுக்கநெறியில் நிற்போர் என்றும் இன்பமாக வாழ்வர்.

31. சிறப்புஈனும்; செல்வமும் ஈனும்; அறத்தின்ஊஉங்கு
   ஆக்கம் எவனோ உயிர்க்கு?

அறமானது சிறப்பையும் செல்வத்தையும் தரும். ஆகையால் அத்தகைய அறத்தை விட உலகில் நன்மை தருவது வேறு எது?

32. அறத்தின்ஊஉங்கு ஆக்கமும் இல்லை; அதனை
   மறத்தலின் ஊங்குஇல்லை கேடு.

ஒருவனது வாழ்க்கைக்கு அறத்தைவிட ஆக்கம் தருவது எதுவும் இல்லை. அதேபோல் அறத்தை மறப்பதை விடக் கெடுதியானது எதுவும் இல்லை.

339. உறங்கு வதுபோலும் சாக்காடு; உறங்கி
   விழிப்பது போலும் பிறப்பு.

இறப்பு எனப்படுவது ஒருவன் உறங்குவதைப் போன்றது; பிறப்பு எனப்படுவது உறக்கம் நீங்கி விழித்துக் கொள்வதைப் போன்றது.

621. இடுக்கண் வருங்கால் நகுக; அதனை
   அடுத்துஊர்வது அஃதுஒப்பது இல்.

துன்பம் வரும் பொழுது அதைக் கண்டு கலங்காமல் சிரித்தல் வேண்டும். அத்துன்பத்தை வெல்வதற்கு அதைப் போன்ற வழிவேறு எதுவும் இல்லை.

260. கொல்லான் புலாலை மறுத்தானைக் கைகூப்பி

எல்லா உயிரும் தொழும்.

ஓர் உயிரைக் கொல்லாமலும் அதன் புலாலை உண்ணாமலும் வாழ்கின்றவனை உலகத்தில் உள்ள எல்லா உயிர்களும் கை கூப்பித் தொழும்.

119. சொற்கோட்டம் இல்லது செப்பம் ஒருதலையா

உள்கோட்டம் இன்மை பெறின்.

உள்ளத்தில் பக்கச்சார்பு இல்லாத தன்மை உறுதியாக இருந்தால், சொல்லிலும் பக்கச்சார்பு இராது.

261. உற்றநோய் நோன்றல் உயிர்க்குஉறுகண் செய்யாமை

அற்றே தவத்திற்குஉரு.

தனக்கு வரும் துன்பங்களைப் பொறுத்துக் கொள்வதும், மற்றய உயிர்களுக்குத் துன்பங்கள் செய்யாதிருத்தலுமே தவத்தின் வடிவமாகும்.

221. வறியார்க்குஒன்று ஈவதே ஈகைமற் றெல்லாம்

குறியெதிர்ப்பை நீரது உடைத்து.

வறியவர்களுக்குப் பொருட்களைக் கொடுப்பதே ஈகை. மற்றவர்களுக்குக் கொடுப்பதெல்லாம் பயனை எதிர்பார்த்துக் கொடுப்பதாகும்.

231. ஈதல்; இசைபட வாழ்தல்; அதுஅல்லது

ஊதியம் இல்லை உயிர்க்கு.

வறியவர்களுக்கு உதவி செய்து, அதன் மூலம் புகழ் பெற்று வாழ வேண்டும். அந்தப் புகழைத் தவிர உயிர்களுக்கு நன்மை தருவது வேறொன்றும் இல்லை.

191. பல்லார் முனியப் பயன்இல சொல்லுவான்
எல்லாரும் எள்ளப் படும்.

கேட்பவர் எல்லோரும் கோபப்பட்டு வெறுக்கும்படி பயனில்லாத சொற்களைப் பேசுகிறவன் எல்லோராலும் இகழப்படுவான்.

ஒழுக்க நெறியிலிருந்து தவறிய பொது மகளிரின் மென்மையான தோள், அறிவில்லாத கீழ் மக்கள் ஆழ்ந்து கிடக்கின்ற நரகமாகும்.

920. இருமனப் பெண்டிரும் கள்ளும் கவறும்
திருநீக்கப் பட்டார் தொடர்பு.

இரு வகைப்பட்ட மனமுடைய பொது மகளிரும், கள்ளும், சூதுமாகிய இம் மூன்றும், திருமகளால் நீக்கப்பட்டவர்கள் மட்டுமே உறவு கொள்வதற்கு உரியவை ஆகும்.

இதில் இரண்டு உண்மைகளை உலக மாந்தர்கள் உணர்ந்து கொள்ளல் வேண்டும். ஒன்று துன்பத்தைத் தரும் விலை மாதர்களின் தொடர்பை எக்காரணம் கொண்டும் விரும்புதல் ஆகாது. அப்படி விரும்பினால் உள்ள பொருள் யாவற்றையும் இழந்து தற்கொலை செய்ய வேண்டிய நிலை உருவாகும்; மதிப்புக்கெடும். இதைத்திருவள்ளுவர் பின்வருமாறு கூறுகிறார்.

அடுத்தது பெரும் பக்தனும் காலத்தால் அழியாத திருப்புகழை பாடியவருமான அருணகிரிநாதர் விலை மகளிரின் வசப்பட்டுப் படும் துன்பத்தை நேரில் காண்பது

திருப்புகழிற்கு உருகாத நெஞ்சு எதற்கும் உருகாது என்பார்கள்.

திருப்புகழைப் பாடப்பாட வாய் மணக்கும் என்பார்கள்

காது, மூக்கு, தொண்டை, நீரிழிவு, சிறு நீகைக் கோளாறு, பித்தம், பாலியல் நோய்கள் யாவும் முருகனை வணங்கித் திருப்புகழைப் பாடினால் தீரும் என்றும் சொல்கிறார்கள்.

அப்படியான நோயை தீர்க்கும் மருந்தை உலகிற்கு அருளிய அருணகிரிநாதரை எவ்வாறு தாசிகள் மீது கொண்ட மோகம் பாதித்துள்ளது. அதனால் முன் எச்சரிக்கையாகவே இவற்றை நாம் கருதுதல் வேண்டும்.

“பொருளும் அருளும் இருந்தால் இம்மையும் மறுமையும் சிறக்கும்” என்கிறார் திருவள்ளுவர்.

247. அருளில்லார்க்கு அவ்வுலகம் இல்லை; பொருளில்லார்க்கு
இவ்வுலகம் இல்லாகி யாங்கு.

பொருள் இல்லாதவர்களுக்கு இவ்வுலகில் இன்பமான வாழ்க்கை இல்லாதது போல, உயிர்களிடத்தில் அருளில்லாதவர்களுக்கு அவ்வுலக வாழ்க்கை இல்லை.

751. பொருள்அல் லவரைப் பொருளாகச் செய்யும்
பொருள் அல்லது இல்லை பொருள்.

ஒரு பொருளாக மதிக்கத் தகாதவனையும் மதிக்கத் தக்கவராகச் செய்யும் தன்மை வாய்ந்தது செல்வத்தைத் தவிர வேறு எதுவும் இல்லை.

752. இல்லாரை எல்லாரும் எள்ளுவர்; செல்வரை
எல்லாரும் செய்வர் சிறப்பு.

பொருள் இல்லாமல் வேறு பல நன்மைகள் உள்ளவனாக இருந்தாலும் அவன் மதிக்கப்படுவது இல்லை; வேறு நன்மைகள் எதுவும் இல்லா விட்டாலும் பொருள் உள்ளவனை எல்லோரும் மதிப்பர்.

753. பொருளென்னும் பொய்யா விளக்கம் இருள் அறுக்கும்
எண்ணிய தேயத்துச் சென்று.

பொருள் என்று சொல்லப்படுகின்ற நல்ல விளக்கு, நினைத்த இடங்களுக்கெல்லாம் சென்று எண்ணிய படி குறைகளைத் தீர்க்கும்.

758. குன்றுஏறி யானைப்போர் கண்டற்றால் தன்கைத்து ஒன்று
உண்டாகச் செய்வான் வினை.

ஒருவன் தனது செல்வத்தை வைத்துச் செயலாற்றுவது என்பது, மலையின் மேல் ஏறி நின்று கீழே நடக்கும் யானைப் போரைப் பார்ப்பதைப் போன்றது.

759. செய்க பொருளை; செறுநர் செருக்கறுக்கும்
எஃகுஅதனின் கூரியது இல்.

ஒருவன் பொருளைச் சேர்க்க வேண்டும். அவனுடைய பகைவரின் செருக்கை அடக்கவல்ல கூரிய ஆயுதம் பொருளன்றி வேறு இல்லை.

760. ஒண்பொருள் காழ்ப்ப இயற்றியார்க்கு எண்பொருள்
ஏனை இரண்டும் ஒருங்கு.

சிறந்ததாகிய பொருளை மிகுதியாகத் தேடியவர்களுக்கு அறமும் இன்பமும் ஆகிய இரண்டும் ஒன்றாகச் சேரும் எளிய பொருள்களாகும்.

எந்த நாட்டிலும் பொருள் உள்ளவர்கள் தான் மதிக்கப்படுகிறார்கள்.

கசாப்புக் கடைக்காரனாக இருந்தாலென்ன, கசிப்பு விற்பவனாக இருந்தாலென்ன அவனிடம் பொருளிருந்தால் பொதுத் தொண்டு செய்வோர், ஆலயத்திருப்பணிகள் செய்வோர் ஏழை எளியவர்கள் எல்லோரும் அவர்களிடமே செல்கிறார்கள்.

ஆரம்பத்தில் கோயிலைக் கொள்ளையடித்தவன் தனது ஆத்ம ஈடேற்றத்திற்காகப் பணக்காரனானதும் அள்ளிக் கொடுக்கிறான்

கலப்படம் செய்பவன் பணக்காரனாகும் வரை தான தருமம் செய்யமாட்டான். பணக்காரனானதும் கோயிலில் அன்னதானம் செய்வான். இதை நாம் சாதாரணமாகச் சமூகத்தில் காண்கிறோம்.

“பற்றிலனாய், முக்தனாய், ஞானத்தில் மனதை ஆறுதல் படுத்தியவனாய், கடமையை யக்ஞமாகச் செய்பவனுடைய பாவம் முழுவதும் கரைந்து போகிறது”

“பொருளைக் கொண்டு செய்யும் யக்ஞத்தை விட ஞான ஞக்ஞம் மேலானது. கர்மம் முழுவதும் ஞானத்தில் முற்றுப் பெறுகிறது”.

இவ்வாறு பகவத் கீதை கூறுகின்றது.

பலர் தர்மமில்லாது தாம் தேடிய பொருட்களைத் தர்மம் செய்து தமது பாவத்தைத் தீர்க்க முயற்சிக்கின்றனர்.

தர்மமில்லாத முறையில் பொருளைச் சேர்த்தவன், அப்பொருளால் தான் எடுக்கும் பிறவிகள் தோறும் துன்பம் வரும் என்றுணர்ந்து பற்றற்றவனாய் இறை சிந்தனையுடன் தர்மம் செய்வானேயானால் அவன் போற்றுதற்குரியவனாவான். ஈஸ்வர சிந்தனை அவனுள் இருக்கும் அதனால் அவன் கடவுளால் மன்னிக்கப்படுவான்.

எப்பொழுதும் நல்லவற்றை எண்ண வேண்டும். நல்லதைச் செய்யாவிட்டாலும் நல்லதை எண்ணுபவன் படிப்படியாக நல்லவனாக மாறுவான். சிந்தனை தான் செயல். மனம் நல்லதைச் சிந்திக்கச் சிந்திக்க மனதின் ஆற்றல்கள் ஒரு

முகப்படும். மன ஆற்றலுள்ளவன் தானும் மகிழ்வுடன் வாழ்ந்து மற்றவர்களையும் மகிழ்வுடன் வாழ உதவி செய்வான்.

இதை விளக்க இராமகிருஸ்ண பரமஹம்சரின் கதை யொன்றைத் தருகிறேன். நெடுந்தூரம் வெயிலில் அலைந்த ஒருவன், ஒரு மர நிழலில் வந்தமர்ந்தான். குளிர்மையான தென்றல் காற்று அவனது உடலை வருடியது. நித்திரை வருவது போல இருந்தது. அப்போது அவன் நினைத்தான்; “நல்ல பஞ்சு மெத்தையில் படுத்தால் எவ்வாறு இருக்கும்?” உடனே அவனருகில் பஞ்சுமெத்தை ஒன்று வந்தது. அதைக் கண்டதும் திகைத்துப் போனான். பின்தான் கனவு காண்கிறேனோ என எண்ணியவாறு அதன் மீது படுத்தான். பின் “நடந்து வந்தகளைப்புத்தீர இரண்டு பெண்கள் வந்து எனது உடலைப்பிடித்துவிட்டால் எவ்வளவு சுகமாக இருக்கும்” என்று எண்ணினான். மறு கணம் இரு அழகிய பெண்கள் அவனின் அருகே வந்து அவனது உடலைப் பிடித்து விட்டனர். மேலும் மகிழ்ச்சியடைந்த அவன்; “நான் நினைத்தவை யாவும் நடைபெறுகின்றன. இப்பொழுது பசிக்கிறது. நல்ல சுவையான உணவுகள் இருந்தால் சாப்பிடலாம்” என நினைத்தான் அதுவும் உடனே வந்து சேர்ந்தது. அவற்றை வயிறாற உண்டுவிட்டு பஞ்சனை மெத்தையில் படுத்திருந்து கொண்டு; “இப்போ ஒரு புலி வந்தால் எப்படி இருக்கும்?” என நினைத்தான். அவன் நினைத்ததும் ஒரு புலி தோன்றி அவனைக் கொன்றுதின்றது.

அவன் நல்லதை நினைத்திருந்தால் தீமை நடைபெற்றிராது. தான் கேட்டதைக் கொடுக்கும் கற்பகதருவின்

அடியில் இருக்கிறேன் என்பதை அவன் அறியவில்லை. அத்துடன் அவன் அறியவும் முயலவில்லை.

ஒரு பொருள் தான் நினைத்தவுடன் வந்தடைந்தால் அதைப் பற்றிச் சிந்தித்தல் வேண்டும். அதைவிட அபூர்வமான பொருட்கள் கிடைத்தால் பலமுறை சிந்தித்து அவதானமாக நடந்து கொள்ளல் வேண்டும்.

தான் நினைப்பவை எல்லாம் கிடைத்தால் அதைவிட வாழ்வில் மகிழ்ச்சியான நிகழ்வு எதுவும் கிடையாது. இந்நிலையில் அவன் தன்னையும் கடவுளையும் மறந்து விடுகிறான்.

தனது நிலையை மறப்பவன் அழிவுக்குள்ளாவான். கடவுளின் நினைவை மறப்பவன் பைத்தியக் காரனைப் போலாவான். இதை இன்பம் வரும் போதும், துன்பம் வரும் போதும் ஒருவன் உணர்ந்து கொள்ளல் வேண்டும்.

சமூகப் பற்றுள்ள ஒருவனுக்கு அந்நிலை உண்டானால் அவன் சமூகத்தைப் பற்றிச் சிந்தித்து சமூகத்தினருக்கு நல்லவை நடைபெற வேண்டும் என நினைப்பான்.

கடவுள் பக்தியுள்ள ஒருவனுக்கு அந்நிலை உண்டானால் அவன் கடவுளை நேரில் காண வேண்டும் என்று நினைப்பான்.

குடும்பப் பற்றுள்ள ஒருவனுக்கு அந்நிலை உண்டானால் தனது குடும்பத்தினருக்கு நன்மை கிடைக்க வேண்டும் என்று நினைப்பான்.

அசுரர்கள் தவம் செய்தபோது இறைவன் நேரில் தோன்றினார். அப்போது அவர்கள் மிகுந்த நிதானத்துடன் வரங்களை கேட்டுப் பெற்றனர். அந்த நிதானம் நல்ல

செயல்களுக்கிருந்திருந்தால் அவர்களுக்கும் நன்மை கிடைத்திருக்கும். சமூகமும் நன்மை அடைந்திருக்கும்.

நல்லவை நடைபெறும் போது மிகவும் அவதானமாக இருத்தல் வேண்டும் என்று இந்து சமயங்கள் கூறுவது இதற்காகத்தான்.

ஒரு தந்தைக்கு முப்பது வயது கடந்தும் திருமணமாகாத ஒரு மகள் இருந்தாள். ஊரில் உள்ள பலர் அவளுக்குத் திருமணம் செய்து வைக்க முயன்றும் அது கைகூடவில்லை.

ஒரு நாள் ஒரு தரகன் அவரிடம் வந்து அயல் ஊரில் உள்ள பெரியதொரு தனவந்தன் அவரது மகளைத் திருமணம் செய்ய விரும்புவதாகக் கூறினான். அவரது மனைவி தனவந்தனது சொத்துக்களின் பெறுமதியைக் கேட்டாள். தரகன் கூறினதும் அவள் மலைத்துப் போனாள். தனது மகள் ஐந்து சந்ததிக்கு நிம்மதியாக இருந்து உண்ணலாம் என்று நினைத்தாள்.

நண்பர்களும் உறவினர்களும் அத்திருமணத்தைச் செய்யும்படி வற்புறுத்தினர். ஆனால் பெண்ணின் தந்தை ஒப்புக் கொள்ளவில்லை. அவர் சொன்னார்; “திடீரென்று எம்மைத் தேடிப் பெரியதொரு அதிஷ்டம் வருவதானால் அதைப் பற்றி நாம் சிறிது சிந்திக்க வேண்டும். இவ்வளவு சொத்துள்ளவனை அவ்வூரவர் ஏன் விரும்பவில்லை என்பதை நாம் விசாரித்து அறிதல் வேண்டும். நான் கடவுளின் மீது அதீதபற்றுக் கொண்டவன். அதனால் எனது நிலையைக் கண்டு கடவுள் மனமிரங்கி அனுப்பியிருக்கவும் கூடும். அப்படியிருந்தாலும் அதை நாம் ஆராய்ந்து பார்த்துத்தான் முடிவெடுத்தல் வேண்டும்.

கடவுள் என் மீது அன்புள்ளவர். அவர் எனக்குச் சொல்வார். அதன் பின் முடிவெடுப்பேன்’’ என்றார்.

எல்லோரும் அவரைப் பைத்தியக்காரன் என்றனர். நாட்கள் சில நகர்ந்தன. ஒரு சிவனடியார் அவரின் வீட்டுக்குவந்தார். அவர் சிவனடியாரை அன்புடன் அழைத்துச்சென்று உபசரித்து உணவளித்தார்.

அவர் செல்லும் போது; ‘‘மகனே, கலங்காதே. உனது மகளை, செல்லப்பாச் செட்டியாரின் மகனுக்குத் திருமணம் செய்து வைக்க ஏற்பாடு செய். உனது நண்பரான அவர் உனது மகளைத் தனது மகனுக்குத் திருமணம் செய்ய விரும்புகிறார். ஆனால் அவரின் மனதில் சிறியதயக்கமுண்டு. நீ பெண்ணைப் பெற்றவன். தயக்கமில்லாமல் போய்க்கேள்’’ என்றார்.

அவர் திகைத்துப் போனார். சிவனடியாரின் வார்த்தைகளைச் சிவனின் வார்த்தைகள் என்று நம்பியவாறு செல்லப்பாச் செட்டியாரின் வீட்டுக்குச் சென்றார். தனது விருப்பத்தைச் சொன்னார். செல்லப்பாச் செட்டியர் மனம் மகிழ்ந்து சம்மதித்தார்.

எப்பொழுதும் அவதானமாக இருக்க முடியாது. ஆனால் எப்பொழுதும் கடவுள் நம்பிக்கையுள்ளவர்களாக இருக்கலாம். கடவுள் நம்பிக்கை நன்மை வரும் போது தீமையைத் தராது. அது போலத் தீமைவரும் போது அது நன்மையாக முடியும். உலகத்தவரின் ஆசாபாசங்களை அவர்களின் பாவ புண்ணியங்களுக்கேற்ப இறைவன் வழங்கி வருகிறான். நல்லதைச் செய்ய விரும்புகிறவனைச் சூழல் விடாது. அதனால் நல்லவற்றைச் செய்ய விரும்புபவர்கள் செய்யாது விடுகின்றனர். இவற்றை விட நோய், பிணி, வறுமை போன்றனவும் மனிதனை

நல்லது செய்ய விடாது தடுக்கின்றன. இவற்றை நீக்க வேண்டுமானால் கடவுள் மீது நம்பிக்கை வைத்துப் பிரார்த்தனைகளில் ஈடுபட்டுச் சமய வாழ்வு வாழ வேண்டும்.

எப்பொழுதும் நல்லவற்றையே நினைத்தல் வேண்டும். மற்றவன் கெட்டுப் போக வேண்டும், நான் மட்டும் தான் வாழ வேண்டும் என்று நினைப்பவன் கட்டாயம் கெட்டுப் போவான்.

தீயவற்றை நினைப்பவன் தீயவற்றையே செய்வான். அவன் செய்யும் தீமைகளால் அவனுக்குத் தான் நட்ட மேற்படும்.

இருவர் நண்பர்களாக இருந்தனர். பின் இருவருக்குள்ளும் பிரச்சினை ஏற்பட்டுப் பிரிந்து விட்டனர்.

ஒருவன் நல்லவன். எதிரிகளுக்குக் கூடத் துன்பம் வர வேண்டும் என்று நினைப்பது பாவம் என்று கருதுபவன்.

மற்றவன் தீயவன். தனது சகோதரன் கூடத் தன்னை விட மேம் படக் கூடாது என்று எண்ணுபவன்.

தீயவன் தனது கால்நடைகளை இரவில் மேய்வதற்காக அவிழ்த்து விடுவான். கால் நடைகள் ஊரரின் பயிர்களை மேய்ந்துவந்தன. இதனால் நட்டமடைந்த ஊரவர் சிலர் அவனது கால் நடைகளைத் துரத்தி வந்தனர். செல்லும் இடங்களிலெல்லாம் துரத்தப்படுவதால் கால்நடைகள் தமது எசமானின் தோட்டத்திற்கு வந்தன. அங்கு யாரும் துரத்தாமையால் அவை பயிர்களை யெல்லாம் மேய்ந்தன.

தீயவன் விடியுமுன் கால்நடைகளைப் பிடித்துக் கட்டுவதற்காகத் தனது தோட்டத்திற்கு வந்தான். அவனது தோட்டம் முற்றாக அழிக்கப்பட்டிருந்தது.

இதனால் தான் இந்து தர்மம் ‘‘தன் வினை தன்னைச் சுடும்’’ என்று சொல்கிறது.

நல்லவர்களுக்குத் துன்பம் ஏற்பட்டால் அதை விலக்க ஆயிரம் பேர் முன்வருவார்கள். தீயவனுக்குத் துன்பமேற்பட்டால் பெற்றோரும் பிள்ளைகளும் இனத்தவர்களும், சுற்றத்தவர்களும் கூட விலகி விடுவார்கள். இது தான் உலக நியதி. அதனால் ‘‘தீமை செய்வோரும் நல்லவராக மாறினால் சுபீட்சம் கிடைக்கும்’’ என்று இந்து மதம் கூறுகின்றது.

கடவுளின் கருணை இப்படியானது என்று எவராலும் கற்பனை கூடப் பண்ணமுடியாது. இறைவன் தேவைக்கேற்றவாறு தேவையான வடிவம் எடுத்து அடியவர்களின் துயரங்களைப் போக்குகிறான். ஒவ்வொரு மனித மனங்களிலும் கடவுளின் இயல்பு வேறுபடுகிறது. மனிதன் தனது தேவைக்கேற்ப மனதை மாற்றுவது போலக் கடவுளின் இயல்புகளையும் மாற்றிக் கொள்கிறான். கடவுளிடம் அவன் எதையும் கேட்கலாம். இரகசியத்தை எப்பொழுதும் கடவுள் பேணுவார் என்ற நம்பிக்கையில் மனிதன் கேட்கக் கூடாதவற்றையெல்லாம் கேட்கிறான்.

ஒரு திருடன் திருடச் செல்லும் போது தனது தொழில் வெற்றியடைய வேண்டும் என்றும், காவல் துறையிடம் தான் அகப்படக்கூடாதென்றும் வேண்டுகிறான்.

காவல் துறையில் உள்ள ஒருவன்; ‘‘கடவுளே திருடர்களைப் பிடித்துத்தா. நான் பதவி உயர்வு பெறவேண்டும்’’ என்று பிரார்த்திக்கிறான்.

பெண் பித்தன் ஒருவன்; “காணும் பெண்கள் எல்லோருடனும் நான் கூடி மகிழ வேண்டும்” என்று கோருகிறான்.

கடவுள் ஒவ்வொருவருக்குள்ளும் அந்தர்யாமியாக இருக்கிறார். அதனால் நாம் நினைக்கும் நினைவுகள் யாவற்றையும் உடனே அறிந்து கொள்கிறார். நினைவுகளுக்கு எல்லையில்லை. அது போலத் தர்மமும் இல்லை. நீங்கள் ஒருவரோடு அன்பாகப் பேசும் போது நீங்கள் பேசுபவரிடம் உண்மையான அன்பு கொள்ளவில்லை என்று உங்களுடன் பேசுபவன் புரிந்து கொள்ள வேண்டும். அப்படிப் புரியாதவன் உள்ளத்தில் கடவுளைப் பேணவில்லை என்றே நாம் கொள்ள வேண்டும்.

குறிப்பு அறிதல் பற்றி வள்ளுவர் பின்வருமாறு கூறுகின்றார்.

701. கூறாமை நோக்கிக் குறிப்பறிவான் எஞ்ஞான்றும்

மாறாநீர் வையக்கு அணி.

ஒருவர் தனது கருத்தைச் சொல்லாத போதும் அவரது முகத்தைப் பார்த்து அவர் கருதியவற்றை அறிந்து கொள்பவன் உலகத்திற்கு உயர்ந்த ஓர் ஆபரணத்தைப் போன்றவன்.

702. ஐயப் படாஅது அகத்து உணர்வானைத்

தெய்வத்தோடு ஒப்பக் கொளல்.

ஒருவனது மனத்தில் உள்ளதை அவன் ஐயப்படாத முறையில் அறிய வல்லவன் தெய்வத்திற்குச் சமனாவன்.

705. குறிப்பின் குறிப்புஉணரா ஆயின் உறுப்பினுள்

என்ன பயத்தவோ கண்.

ஒருவனது கண்களையும் முகத்தையும் பார்த்து அவன் என்ன நினைக்கிறான் எனக் குறிப்பால் அறிந்து கொள்ள முடியாதவனுக்குக் கண்கள் இருந்தும் ஒரு பயனும் இல்லை.

708. முகம்நோக்கி நிற்க அமையும் அகம்நோக்கி
உற்றது உணர்வார்ப் பெறின்.

உள்ளக் குறிப்பை வைத்து என்ன நடைபெற்றது என்று உணரும் வல்லமை உள்ளவன் எதிரியின் முகத்தைப் பார்த்ததும் யாவற்றையும் அறிந்து கொள்வான்.

710. நுண்ணியம் என்பார் அளக்கும்கோல் காணும்கால்
கண் அல்லது இல்லை பிற.

ஒருவனைப் பற்றி நுட்பமாக அறிந்து சொல்பவர்களுக்கு அவ்வாறு சொல்வதற்கு அளவு கோலாகத் துணை நிற்பது அவரது கண்களைத் தவிர வேறு இல்லை.

எல்லா மனிதர்களிடமும் பணம் இருக்க வேண்டும். ஆனால் பணத்துக்குள் எந்த மனிதனும் இருக்கக் கூடாது. கடவுள் எல்லா மனிதருக்குள்ளும் இருக்கிறார். ஆனால் கடவுளுக்குள் இருக்கும் மனிதர்கள் சிலரே. பணத்துக்குள் இருக்கும் மனிதன் ஒரு போதும் கடவுளுக்குள் இருக்க மாட்டான்.

பொருள் உள்ளவர்கள் தீயவர்களாக இருந்தாலும் மதிக்கப்படுவார்கள். அவர்கள் மதிக்கப்படுவது பொருளை விரும்பும் மனிதர்களால் தான்.

விநாயக புராணத்தில் பிராமணர்களைக் கொன்று கொள்ளை அடித்து வந்த காமந்தனிடம் பொருள் பெற யாரும் விரும்பவில்லை.

நாவலூரில் ஒரு பணக்காரன் வாழ்ந்து வந்தான். அவன் தொழிலாளர்களை வருத்தி வேலை செய்விப்பான். ஆனால்

சம்பளத்தை முழுமையாகக் கொடுக்க மாட்டான். ஒரு நாள் வேலை செய்துவிட்டு ஒன்பது நாட்கள் அலைந்தால் தான் அவனிடம் அரைவாசிச் சம்பளமாவது பெறலாம். அத்துடன் அவன் வட்டிக்குப் பணம் கொடுக்கும் போது முதல் மாத வட்டித் தொகையைக் கழித்துக் கொண்டே கொடுப்பான். ஊரில் நடைபெறும் வட்டியைவிட அதிகமான வட்டி பெறுவான். அவனுக்குப் பிள்ளைகள் இல்லை.

அவனுக்குத் திடீரென்று குடல்புண் நோய் உண்டானது. வயிற்று வலியால் துடிதுடித்த அவன் ஊரில் உள்ள வைத்தியர்கள் எல்லோரிடமும் மருந்து வாங்கி உணடான். நோய் தீரவில்லை.

ஒரு நாள் அவன் அவ்வூரில் உள்ள கோயிலில் வசித்து வந்த சிவனடியாரிடம் வந்து தனது நோயைப் பற்றிக் கூறி, தனது நோயைக் குணமாக்கும் வழிவகைகளைப் பற்றிக் கேட்டான்.

அதற்கு அவர் ஊரில் உள்ள சிவன் கோயிலில் அன்னதானம் செய். அத்துடன் தினமும் ஓர் அதிதிக்கு உணவு கொடுத்த பின்பே நீ உண். சில காலங்களில் உனது நோய் குணமாகும் என்றார்.

ஒரு வெள்ளிக்கிழமை அவன் சிவன் கோயிலில் அன்னதானம் செய்வதாக அறிவித்தான். அவனது வேலையாட்கள் மூன்று மூடை அரிசியை அவித்து அதற்கான கறிகளையும் சமைத்தனர்.

பகல் சாப்பாட்டு நேரம் கழிந்த பின்பும் யாரும் சாப்பிட வரவில்லை. அதனால் அவன் வீடுவீடாகச் சென்று மக்களை அழைத்தான். அப்பொழுதும் யாரும் வரவில்லை. அதனால்

துயரப்பட்ட அவன் சிவனடியாரிடம் வந்து நடந்ததைக் கூறினான்.

“மகனே, உணவு தான் மனிதனின் உணர்வுகளைத் தட்டி எழுப்புவது; உணவுதான் ஒருவனின் உணர்வுகளைச் சமநிலைப் படுத்துவது; உணவு தான் ஒருவனின் வாழ்க்கையைத் தீர்மானிப்பது; அவனுக்கு இன்ப துன்பங்களைக் கொடுப்பது. நெருங்கிய உறவினன் அல்லாதவனது வீட்டில் உணவு பெற்று உண்ணக்கூடாது. மங்கல வைபவமாக இருந்தால் கூட உணவு உண்ணக் கூடாது”.

“தானம் கொடுப்பவன் தனது பாவம், பழி போன்றவற்றை நீங்குவதற்காகவே உணவைக் கொடுக்கிறான். அவன் செய்த பாவம் நீங்க வேண்டுமானால் அதை இன்னொருவன் பெற வேண்டும். ஏழைகள் கூடத் தனவந்தர்களாக மாற விரும்பினால் அவர்கள் யாரிடமும் இரந்துண்ணக் கூடாது. முயற்சி செய்தல் வேண்டும். இறக்கும் நிலையில் இருந்தால் கூட ஒருவன் யாசித்து உண்ணக் கூடாது. கடவுள் மீது நம்பிக்கையும், பக்தியும் கொள்ளும் ஒருவன் தன் முயற்சியால் எதையும் பெறலாம். ஒரு முறை இரந்து உண்டானேயானால் அவன் அதை வழக்கமாக்கிக் கொள்வான். பெரும் பாலான மனிதர்களுக்கு உழைப்பதில் விருப்பமிருப்பதில்லை. இவர்கள் தமோ குணத்தை உடையவர்கள். இவர்கள் செயல்களை அசட்டையுடன் செய்வார்கள். எந்நேரமும் சோம்பி இருப்பார்கள். உழைப்பதைவிட, உறக்கம் கொள்வதிலேயே இன்பங் காண்பார்கள். இவர்கள் பிறரின் உழைப்பில் வந்த உணவு வகைகளை இரந்துண்டு வாழ்வார்கள். இவர்களுக்கு மீட்சியே

இல்லை. அதனால் தான் இந்து ஒருவன் இரந்துண்ண கூடாது என்று இந்து தர்மம் கூறுகிறது.'' என்றார் அந்தச் சிவனடியார்.

அந்தப் பணக்காரனுக்குச் சந்தேகம் தீரவில்லை. எனினும் தனது மனதில் உள்ளவற்றைக் கூற அவனுக்கு பயமாக இருந்தது. அதை உணர்ந்த சிவனடியார் சொன்னார்; ''மகனே, நீ சிவனடியார்கள் இரந்துண்கிறார்களே அது சரியா? என்று நினைக்கிறாய். சிவனடியார்கள் எல்லா மக்களிடத்திலும் இரக்க மாட்டார்கள். தானம் செய்வதற்குத் தகுதிகள் இருக்கின்றன. தானம் செய்ய விரும்புபவன் தனது உடலை வருந்தித் தொழில் செய்து அதில் தானம் செய்த மிகுதியை தான் உண்ண வேண்டும். அப்படி நீ செய்தாயா?''

பணக்காரன் எதுவும் பேசாமல் நின்றான்; ''கோயிலில் நீ கொடுத்த உணவைக் கூட வாங்கியுண்ணாத இவ்வூரவர், நீ வீட்டில் கொடுக்கும் உணவை வாங்கி உண்பார்களா? எனக்குத் தெரிந்த ஒரு பண்ணையார் இருந்தார். அவரும் உன்னைப் போன்றவர். எச்சிற் கையால் கூடக் காகம் கலைக்க மாட்டார். அவருக்கு ஏழரைச்சனி திசை நடந்தது. அதனால் தொழிலில் அடிக்கடி நட்டமேற்பட்டது. அத்துடன் நோயும் அவரை வாட்டியது. அவர் தனது நோய் தீரச் சனிக்கழமைகளில் விரதம் அனுஷ்டித்தார். சிவன்கோயிலில் எள்ளுச் சாதம் பொங்கி எள்எண்ணெய் எரித்தார். பின் வீட்டுக்கு வந்து காகத்திற்கு உணவு படைத்து விட்டு மாலையாகும் வரை காகத்தைக் ''கா.... கா......'' எனறு கூவியழைத்தார். காகங்கள் வரவில்லை.

அவரின் வீட்டுக்கு அருகில் ஓர் ஏழை விவசாயி இருந்தான். அவன் தினமும் உணவு உண்ணும் முன்

காகங்களுக்கு உணவு வைப்பான். அவன் உண்ணும் நேரத்திற்குக் காகம் வந்து அவனது வீட்டு முற்றத்தில் நின்ற வேப்பமரத்தில் காவல் இருக்கும். பறவைகள் மிருகங்களுக்குகூடத் தமக்கு உணவு தரக்கூடியவர் யார் என்று தெரியும்'' என்றார் சிவனடியார்.

அந்தப் பணக்காரனுக்கு அப்பொழுது தான் தனது நிலை தெரிந்தது.

பணமுள்ளவர்கள் ஏழை எளியவர்களுக்கும், சிவனடியார் களுக்கும், அங்கவீனர்களுக்கும், நோயால் உழைக்க முடியாது கஷ்டப்படுபவர்களுக்கும் அவர்களது மனம் மகிழும் வரை கொடுத்தல் வேண்டும். இதை வள்ளுவர் பின்வருமாறு கூறுகிறார்.

1051. இரக்க இரத்தக்கார்க் காணின்; கரப்பின்
அவர்பழிதம்பழி அன்று.

இரக்கத் தக்கவர் யார் என்று அறிந்த பின்பே இரக்க வேண்டும். அவர் இல்லை என்று சொல்வாரேயானால், அது அவருக்கே பழியை உண்டாக்குமே தவிர இரப்பவருக்குப் பழி ஏற்படாது.

1054. இரத்தலும் ஈதலே போலும் கரத்தல்
கனவிலும் தோற்றாதார் மாட்டு.

உள்ளதை மறைத்துக் கூறும் தன்மையைக் கனவிலும் எண்ணாதவரிடத்தில் இரந்து கேட்பது பிறருக்குக் கொடுப்பதைப் போன்ற சிறப்புடையது.

1061. கவராது உவந்துஈயும் கண்ணன்னார் கண்ணும்
இரவாமை கோடி யுறும்.

உள்ளதை ஒளிக்காமல் மனமகிழ்வுடன் கொடுக்கும் கண்களைப் போல் சிறந்த பண்புடையவர்களிடத்திலும் சென்று இரவாமல் இருப்பது கோடி மடங்கு நல்லதாகும்.

1063. இன்மை இடும்பை இரந்துதீர் வாம்என்னும்
வன்மையின் வன்பாட்டது இல்.

வறுமைத் துன்பத்தை இரப்பதன் மூலம் தான் தீர்க்க முடியும் எனக் கருதி முயற்சியைக் கைவிடுவதைப் போன்ற கொடுமை வேறு இல்லை.

1064. இடம்எல்லாம் கொள்ளாத் தகைத்தே இடம்இல்லாக்
காலும் இரவுஒல்லாச் சால்பு.

வாழ வழியில்லாத நிலை வந்த போதும் கூட இரந்து வாழ விரும்பாத உயர்ந்த பண்பு, இந்த உலகத்தில் உள்ள இடமெங்கும் கொள்ளாத பெருமை உடையதாகும்.

1065. தெள்நீர் அடுபுற்கை ஆயினும் தாள்தந்தது
உண்ணலின் ஊங்குஇனியது இல்.

தனது முயற்சியால் சமைத்த தெளிந்த நீரைப் போன்ற கூழே ஆயினும், அதை உண்பதை விட இனிமையானது வேறொன்றுமில்லை.

1066. ஆவிற்கு நீர்என்று இரப்பினும் நாவிற்கு
இரவின் இளிவந்தது இல்.

பசுவிற்கு நீர் வேண்டும் என்று இரந்து கேட்டாலும் அந்த இரத்தல் நாவிற்கு மிகவும் இழிவானது ஆகும்.

1067. இரப்பன் இரப்பாரை எல்லாம் இரப்பின்
கரப்பார் இரவன்மின் என்று.

உள்ளதை மறைத்து வைத்து விட்டு இல்லை என்று சொல்வோரிடம் சென்று இரந்து கேட்க வேண்டாம் என்று இரப்பவர்கள் எல்லோரையும் இரந்து வேண்டுகிறேன்.

இப்படி கூறும் வள்ளுவன் உலகில் நல்ல முறையில் வாழத்தெரியாது இரந்து வாழும் மனிதர்களைப் படைத்தமைக்காக இறைவனைச் சபிக்கிறார்.

1062. இரந்தும் உயிர்வாழ்தல் வேண்டின் பரந்து
கெடுக உலகுஇயற்றி யான்!.

உலகத்தைப் படைத்தவன் இரந்து தான் உயிர்கள் வாழ வேண்டும், என்ற நிலையில் சில உயிர்களைப் படைத்திருந்தால், அப்படிப் படைத்தவன் இரப்பவர்களைப் போல எங்கும் அலைந்து திரிந்து கெட்டுப் போகட்டும்.

இந்து சமயங்கள் ''ஐயம் இட்டுண்'' என்றும் சொல்கின்றன; ''ஏற்பது இகழ்ச்சி'' என்றும் சொல்கின்றன. இது பற்றி முன்பு ஒரு கட்டுரை எழுதியுள்ளேன். மனிதனின் மீது மனிதன் நம்பிக்கை வைக்கக்கூடாது. பணம், பொருள், காணி பூமிகளைத் தேட முயற்சியுங்கள். அவற்றை பற்றின்றித் தேடி தேவையானவர்களுக்குக் கொடுக்க முயற்சியுங்கள்.

கடவுளிடம் மட்டும் நம்பிக்கை வையுங்கள்; அவர் மீது அன்பு செலுத்துங்கள்; உங்கள் தேவைகள் அனைத்தையும் அவரிடம் ஒப்படையுங்கள்; தேவையான உதவிகள் தேவைப்படும் நேரம் உங்களுக்கு வந்து சேரும். இதைப் புராண இதிகாசங்களில் நீங்கள் காணலாம்; பெரிய புராண நாயனார்களின் கதைகளில் காணலாம்.

திருஞானசம்பந்த மூர்த்தி நாயனார் கையால் தாளம் போட்டுப் பாடினார். ஆதனால் அவரது கை வலிக்கும் என்பதற்காக அவரது கையில் ஒரு பொற்தாளத்தைக் கொடுத்தார் சிவபெருமான்.

ஒரு நாள் திருஞானசம்பந்த மூர்த்திநாயனார் திருத்தூங்கான மாடம் என்ற சிவத்தலத்திலிருந்து அடியவர்களுடன் கால் நடையாகச் சென்றார். அவரது பூப்போன்ற பாதங்கள் கற்கள் பட்டுப் புண்ணாகின. அதைக்கண்டு மனம் வருந்திய சிவபெருமான் கோயிலிலே இருக்கின்ற பிராமணர்களின் கனவிலே தோன்றி; "எனது மைந்தன் என்னை தரிசிக்கக் கால் நடையாக வருகின்றான். அவனது பாதங்கள் புண்ணாகி விட்டன. நீங்கள் முத்துச் சிவிகையும், முத்துக்குடையும், முத்துச்சின்னங்களையும் நம்மிடம் வந்து எடுத்துச் சென்று அவனை அழைத்து வாருங்கள்" என்றார்.

விழித்தெழுந்த பிராமணர்களின் முன் முத்துச் சிவிகையும், முத்துக்குடையும், முத்துச்சின்னங்களும் இருந்தன.

எப்பொழுதும் இறைவன் தான் படைத்த உயிர்கள் அனைத்தையும் காப்பாற்றத் தயாராகவே இருப்பான். இதை உணராதவர்கள் தான் வாழ்க்கையில் எப்பொழுதும் கஷ்டப்படுகிறார்கள்.

நல்லொழுக்கம் உள்ளவர்கள் மென்மேலும் நன்மை அடைகிறார்கள்; தீய ஒழுக்கமுள்ளவர்கள் எந்நாளும் துன்பப் படுகிறார்கள். மனிதக் குணங்கள், மிருகக் குணங்கள், தெய்வீகக் குணங்கள் என்ற மூன்றும்தான் உலகில் உள்ள எல்லா மனிதர்களிடமும் உள்ளன. தெய்வீகக் குணமுடையவன் சத்துவன்; மனிதக் குணமுள்ளவன் ராஜசன்; மிருகக் குணமுடையவன் தாமசன். மிருகக் குணமுடையவனும் நல்லொழுக்கம் மூலம் தெய்வீகக் குணமுள்ளவனாக மாறலாம். அப்படி மாறினால் உனது இதயத்துள் அன்பு ஊற்றெடுக்கும்; தர்ம சிந்தைகள் மேலோங்கும். அந்தநிலை உன்னை

வந்தடைந்தால் உயிர்கள் படும் வேதனை உன்னையும் தாக்கும். நீ மற்றவர்களுக்காக இரங்கிச் சேவை செய்வாய்.

ஒழுக்கமாக வாழ்வதும், துன்பப்படும் உயிர்களுக்கு உதவுவதும் இந்து ஒருவனின் தர்மமாகும். இதையே இந்து சமயங்கள் எடுத்துக் கூறுகின்றன.


Distributed By :
LANKA BOOK DEPOT
F.L. 1.14, Dias Place,
Gunasingapura,
Colombo - 12.
Tel : 011-2-341942
PRICE : 120.00